Regd No. M. 4900.

16-பக்கங்கள்.

குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 21 } ஈரோடு 28-8-1948 சனிக்கிழமை { மலர் 51.

தேசியத் தோழர்களே!

இரண்டையும் படியுங்கள்.

இலங்கையில் இணையற்ற வீரன்!

பொருளாதார காரணங்களை முன்னிட்டு இந்தியத் தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் இலங்கையிலேயே நீடித்திருப்பதால் இலங்கை நாட்டினரின் ஜீவனம் பாதிக்கப்படும் என்று இப்பொழுது நாங்கள் கருதுகிறோம்.

தேவையில்லாத இந்தியரைத் திருப்பி அனுப்ப நாங்கள் விரும்புகிறோம். இது இந்தியாவுக்கு விரோதமான கொள்கையாக இருக்கலாம்; ஆனால் எங்கள் நாட்டின் பொருளாதார இன்னல்களைத் தவிர்ப்பதில் எந்த நிலைமையையும் சமாளிக்க நாங்கள் தயாராயிருக்கிறோம்.

நாங்கள் இந்தியாவுடன் சிநேகமாக இருக்க விரும்புகிறோம். எங்கள் பழம் பெருமைக்கு நாங்கள் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் உலகில் எந்த நாட்டுக்கும் எங்கள் நாட்டை நாங்கள் விட்டுக்கொடுக்க முடியாது. எங்கள் அடிப்படை உரிமைகளைப் பாதிக்காத அளவுக்குத் தான் நாங்கள் அந்நியருக்கு உரிமைகளை வழங்கத் தயாராயிருக்கிறோம்.

மேற்சொன்னவாறு 20—8—48ந் தேதி இலங்கை சட்டசபையில், சபை லீடர் தோழர் பண்டார நாயக் அவர்கள் பேசிய பின்பு இலங்கைப் பிரஜா உரிமை மசோதா ஓட்டுக்கு விடாமலேயே நிறைவேற்றப்பட்டு விட்டது! சபாஷ்!

வாழ்க இலங்கையின் இணையற்ற வீரன்!

இங்கு நம் நாட்டில் சுக்ரீவன் தர்பார்!

அரசியல் பொருளாதார காரணங்களை முன்னிட்டு வடநாட்டினரின் ஆதிக்கம் திராவிட நாட்டில் நீடித்திருக்க விடுவோமானால் திராவிட நாட்டினரின் வாழ்வு பாதிக்கப்படும் என்று வெகு நாளாகவே நாங்கள் கருதுகிறோம்.

நாங்கள் விரும்பாத வடநாட்டினரைத் திருப்பி அனுப்ப நாங்கள் விரும்புகிறோம். இது வடநாட்டாருக்கு விரோதமான கொள்கையாக இருக்கலாம்; ஆனால் எங்கள் நாட்டின் அரசியல், பொருளாதார இன்னல்களைத் தவிர்ப்பதில் எந்த நிலைமையையும் சமாளிக்க நாங்கள் தயாராயிருக்கிறோம்.

நாங்கள் வடநாட்டாருடன் சிநேகமாக இருக்க விரும்புகிறோம். இதுவரை அவர்கள் செய்துவந்த தவறுகளையும் மறந்துவிடக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் உலகில் எந்த நாட்டுக்கும் எங்கள் நாட்டை நாங்கள் விட்டுக்கொடுக்க முடியாது. எங்கள் அடிப்படை உரிமைகளைப் பாதிக்காத அளவுக்குத்தான் நாங்கள் அந்நியருக்கு உரிமைகளை வழங்க விரும்புகிறோம்.

எனவேதான் வடநாட்டு ஆதிக்கத்தை ஒழிக்க முதல் வேலையாக வடநாட்டு இந்தியை எதிர்க்கிறோம்; வடநாட்டாரின் ஏஜண்டான கவர்னர்-ஜெனரல் வருகையை பகிஷ்கரிக்க விரும்புகிறோம்.

மேற்சொன்னவாறு 22-8-48ந் தேதி சென்னையில் கூடிய மத்திய திராவிடர் கழகத்தினர் பேசிக்கொண்டிருந்தபொழுதுதான் "நமது சர்க்கார்" என்று சொல்லப்படும் வடநாட்டின் அடிமைகளடங்கிய சென்னை சர்க்கார் நமது தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை உள்பட சுமார் 100-பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். வெட்கம்!

நாட்டின் விடுதலையிலே நாட்டங்கொள்ளுங்கள்.

தமிழகமானது முன்னொரு காலத்தில் தெற்கில் கடல் கொள்ளப்பட்ட குமரிக்கண்டத்துடன் சேர்ந்து பெரு நிலப்பரப்பாயிருந்ததென்று, ஹைக்கேல், ஒல்டுஹாம், ஸ்காட் எலியட் முதலிய நிலநூல் வல்லார் கூறுகின்றனர். மேலும் இப்பெரு நிலப்பரப்பே உலக மக்களின் உற்பத்திக்குத் தகுதியான இடமாக இருந்ததெனப் பல ஆராய்ச்சியாளரின் முடிபின் மூலமாகவும் கூறப்படுகிறது. ஆதலின், இப்பெருநிலத்தில்தோன்றிய ஆதிமக்களே உலகின் ஏனையப் பகுதிகளிலும் பரவி வாழ்ந்து வந்தனரெனத் தெரிகிறது. அம்மாதிரி பிரிந்து வாழ்ந்த மக்கள் தாமிருக்கு மிடத்தின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு பல இனங்களாகப் பிரிக்கப்பட்டனர். இவ்வினங்களுள் உலகத் தோற்றத்தின் முதலிடமாகிய குமரிக் கண்டத்துள் வாழ்ந்த மக்கள் 'திராவிடர்'கள் என்பவர்களாவர். இத்திராவிடர்கள் இங்கு பற்பல நாட்டினர் வருவதற்கு முன்னரே, விவசாயத் தொழிலை விருத்தியடையச்செய்தும், வாணிபத்தை வளர்ச்சிப்பெறச் செய்தும், அறிவோடு கூடிய அரசியலை நடத்தும் திறன் வாய்ந்தும், உலகம் போற்றும் உன்னதச் சிறப்போடு வாழ்ந்தும் வந்தனர்.

இவ்வாறு திராவிடர்கள் திறமையுடன் வளமிக்க வாழ்க்கை நடத்தி வருங்காலத்தில் 'ஆரியம்' என்ற இனத்தினர் இந்தியாவின் வடமேற்குக் கணவாய்களின் வழியாக வந்து இந்தியாவின் பல பகுதிகளில் பரவினர், இவ்வாரியர்கள் வடதுருவப் பிரதேசமான ஆர்ட்டிக் மகாசமுத்திரத்தை அடுத்த ஒரு நாட்டிலிருந்து அய்ரோப்பா முழுவதும் பரவி இந்தியாவிற்கும் வந்ததாக வேத ஆராய்ச்சியிற் சிறந்த பாலகங்காதர திலகர் கூறியிருக்கிறார். வேறு சிலர், காஸ்பியன் கடலுக்குப் பக்கத்திலுள்ள வடமேற்குப் பிரதேசங்களிலிருந்து இந்தியாவிற்கு வந்தனரெனவும் கூறுகின்றனர். மற்றும் சிலர், அய்ரோப்பா கண்டத்தின் ஓர் பாகமாகிய ஸ்காந்திநேவியம் என்ற இடத்தினின்று புறப்பட்டு மத்திய ஆசியாவின் மேற்குப் பாகத்திலுள்ள துருக்கிஸ்தானில் தங்கி இருந்து பின்னர் இந்தியாவிற்கு வந்ததாகவும் கூறுகின்றனர். யார் எப்படிக் கூறினாலும் ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தது மாத்திரம் உண்மை. இதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இவ்வாறு ஆரியர்கள் பல நாடுகளில் குடியேறியராதலின் அவர்களின் மொழியும் இலத்தீன், கிரீக், எபிரேயம், சமஸ்கிருதம் எனப் பிரிவுபட்டது. இவற்றில் சமஸ்கிருதம் பேசக்கூடிய ஆரியர்களே திராவிட நாட்டிற்கு வந்து தங்களின் வரண்ட வாழ்வை வளமாக்கிக்கொள்ள நினைத்து, மன்னர்களையும், மக்களையும், மதத்தால் மயக்கி மடையராக்கினர். புகழுடன் வாழ்ந்தவர்களைப் புராணங்கள் படிக்கச் செய்து புத்தியற்றவர்களாகச்செய்தனர். இன்ப வாழ்வு நடத்தியவர்களை இதிகாசங்கள் படிக்கச் செய்து இழிவான வாழ்வு வாழச் செய்தனர். பகுத்தறிவோடு வாழ்ந்தவர்களை பஜனைப் பாடச் செய்துபாமரர்களாக்கினர். வீரத்தோடு வாழ்ந்தவர்களை விபூதி பூசச்செய்து வீணர்களாக்கினர்.

சுருங்கக்கூறின், திராவிடர்களைப் பல வகைகளிலும் ஏமாளிகளாகவும், கோமாளிகளாகவும் செய்து பல ஜாதிகளாக வகுத்தும், ஜாதிக்கொரு நீதியும் வகுத்தனர். இந்த ஜாதியும், நீதியும் வகுக்கப்பட்டதால்தான் இந்தியாவில் வியாபாரத்துக்குவந்த ஆங்கிலேயரால் அரசு அமைக்கவும் முடிந்தது. இது ஆங்கிலேயருக்கும் நல்லதாகத் தோன்றியதால் மதத்தில் தலையிடாமலும், ஆரிய நீதி (மனு நீதியை) அரசியலில் கலந்தும் ஆட்சி செய்து வந்தனர். இதுமாத்திரமல்லாமல் ஆங்கில அரசுக்கு முன்பும் பின்பும் பற்பல மதங்கள் வரவே இந்து மதத்தின் கொடுமையால் மக்கள் பல மதங்களுக்கு மாறினர். அப்படி மாறிய மக்கள் தனி மதத்தவரெனச் சொல்லித் தனிநாடு கோரினர். இதற்குப் போதிய சான்று 'பாகிஸ்தான்' என்ற பிரிவினையே ஆகும்.

இப்படிப்பட்ட ஆரியர்களே ஆங்கில அரசுவில் அநேக ஆதரவு பெற்றும், 1885ல், 'எ. ஒ. ஹ்யூம்' என்ற ஆங்கிலேயனால் இந்தியர்கள் சில நலன்களை ஆங்கில ஆட்சியில் பெறுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட 'காங்கரஸ்' என்ற ஸ்தாபனம் 'வெள்ளையனே வெளியே போ!' என்று கூறுமளவுக்கு மாறவே, இதில் தாங்களும் சேர்ந்துகொண்டு, 'வெள்ளையனே வெளியே போ!' என்று வெள்ளையனிடம் வேதனைப்பட்டவர்கள் போல் கூறினர். இதை நாமும் நம்பி நமது மாணவர்கள் மண்டை உடைபடவும், இளைஞர்கள் இரத்தம் சிந்தவும் வாலிபர்கள் வதைபடவும் உழைப்பாளிகள் உதைபடவும், சிதம்பரனார் சிரமப்பட்டு இறக்கவும், குமரன் குண்டாந்தடிக்கு இரையாகவும் செய்தோம் செழிப்பான வாழ்வுக்கு! 'வாங்கியும் விட்டோம் 'வந்தேமாதரம் கூச்சலுடன்' 'ஜெய்ஹிந்து' கோஷமும் போட்டு வாழ்வு! செழிப்பான வாழ்வுக்கு பதில் செத்தவாழ்வு. இந்த வாழ்வில்தான் இருக்கின்றான் இன்று திராவிடன்! தேசசேவை செய்தும் தேவையற்றவனாகிவிட்டான்! சுதந்திர இந்தியாவில் ருத்திரப் பட்டம் போகவில்லை. நயவஞ்சகர்கள் நசுக்கப்படவில்லை! மதம் மறையவில்லை. சாதிகள் சாகவில்லை. இன்னும் ஊதாரிக்கும்பல் உயர்சாதிகளாகவே உயிர்வாழ நினைக்கின்றது-இல்லை! இன்றும் வாழ்ந்துகொண்டு இருக்கின்றது. இதை இல்லை என்று சொல்லும் இனத்துரோகிகளும், மறுக்கும் மந்தமதியினர்களும், மே-1-ம்தேதி சென்னையில் நிகழ்ந்த முற்போக்குப் பார்ப்பன மகாநாட்டின் முக்கிய பேச்சைக் கவனிக்கவும்.

அதாவது:— ஜாதிமத வித்தியாசமில்லாத சமூகம் வேண்டும் என்கின்றனர் அது முடியுமா? என்பது தான் பிரச்னை. பெண்களையும், ஆண்களையும் மாற்ற முயற்சிப்பது போல் இருக்கிறது, இந்த முயற்சி. ஆண்டவன் படைப்பிலே ஏற்றத் தாழ்வுண்டு. ஆண்டவன் செயலை மாற்ற நம்மால் இயலாது''

என்று கூறியிருக்கின்றனர். இதைக் கண்டும் சாதிகளை அழிக்கும் சர்க்கார் காணாததைப்போல் இருக்கின்றனர். உண்மையாகவே முன்னேற்றத்தை விரும்பும் சர்க்காராக இருந்தால், சுவாமி விவேகாநந்தர் கூறியதைப் போல்,

''முன்னேற்றத்திற்கு எப்போதும் தடையாக உள்ள புரோகிதர்களைப் புறக்கணியுங்கள் அவர்கள் உள்ளம் ஒருபோதும் விரியாது. அவர்கள் சென்ற பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் மூடநம்பிக்கைக் கொடுமை இவற்றினின்றும் தோன்றியவர்கள். அதனால் புரோகிதத்திலிருந்து களைந்து எறியுங்கள்''

என்பதைச் செய்திருக்க வேண்டாமா? இதை விட்டு இன்னும் மதத்துக்கு ஆதரவு தேடி மக்களைமடையராக்கும் சாதிகளை வளர்க்க முயற்சிப்பதா?

மக்கள் படும் அவதியைப்பார்க்காமல் மதத்துக்குஆதரவுதேடுவதா? இதுபோன்றவற்றில்தானே கவர்னர் ஜெனரல் ஆச்சாரியிலிருந்துகாமகோடிஆச்சாரிவரை மதத்துக்கு ஆதரவுதேடி ஆதாரம் தெரிவிக்க முயற்சிக்கின்றனர். இந்த நிலையில் ஆச்சாரியாரே அட்மிரல் மவுண்ட்பேட்டன் அமர்ந்திருந்த

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

இரணியனுக்குத் தடையுத்தரவு.

பாசிசம் வளர்கிறது.

★

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் எழுதப்பட்ட "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற நாடகத்தை பொதுமேடைகளில் நடிக்கக் கூடாதென்று சென்னை அரசாங்கத்திலிருக்கும் காங்கரஸ் பாசிஸ்டுகள் தடைவிதித்திருக்கின்றனர். எதேச்சாதிகாரப் போக்குக்கொண்ட ஆட்சியாளர் அடக்குமுறைச் சட்டங்களை ஒன்றின் பின் ஒன்றாக அள்ளி வீசி எதிர்க்கட்சியினர் கொள்கைகள் நாட்டில் பரவுவதைத் தடை செய்துவிட முன்வந்துவிட்டனர். ஆனால், மக்கள் சமுதாயத்திற்கு விளையும் கேடுகளை அவர்கள் உணரவில்லை.

நாடகம் ஒப்பற்ற சக்திவாய்ந்த கலை. அக்கலையைக் கொண்டு நாட்டு மக்களுக்கு நல்லறிவை புகுத்தி ஒப்பற்ற மனித சமுதாயமாக திராவிடர்களை மாற்றியமைக்க முயற்சிக்கின்றோம் நாம். புராண நாடகங்களையே பார்த்துப் பார்த்து பழைமையில் மூழ்கிக்கிடக்கும் மக்களின் உள்ளத்தில் புதியதோர் உணர்ச்சியை ஊட்டுகின்றோம். அடிமை மக்களின் உள்ளத்தில் விடுதலை பெறவேண்டும் என்ற ஆர்வத்தை ஊட்டி உரிமைக்குப் போராட களத்திற்கு அழைத்துச் செல்கின்றோம். மக்கள்உள்ளத்தில் பதிந்து கிடக்கும் குருட்டு நம்பிக்கைகளையும், அறிவீனத்தையும் அகற்றுகிறோம். கோழையாக வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் மக்களின் இரத்தத்தில் வீரத்தை ஊட்டுகிறோம். இந்த நற்பணியில் நாடகக்கலையைப் பயன்படுத்தும் நமது நாடகங்களுக்குத்தடை விதிக்கின்றனர் அரசாங்கத்தார். இதே சமயத்தில் சிவ பெருமானின் திருவிளையாடல்களையும், பரந்தாமனின் லீலா விநோதங்களையும் மேல் உலக வாழ்வில் நிரந்தரமான இன்பங்கள் இருப்பதாகவும் அதை அடைவதற்கே இவ்வுலக வாழ்வை ஆண்டவன் நமக்குக் கொடுத்திருப்பதாகவும் காட்டி, அதைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்ற கருத்தை ஊட்டி, மக்களை நடைப்பிணமாக்கி சுரண்டிக்கொழுப்பதற்கு நாடகக்கலையைப் பயன்படுத்துகிறது மற்றொரு கூட்டம். இது போன்ற நாடகங்களுக்கு அதரவு தருகின்றனர் அரசாங்கத்தார்.

புது யுகத்தைத் தோற்றுவிக்கும் புதுக் கருத்துக்கள் தேவை எனற நூல் இளைஞர்களின் உள்ளத்தில் எழுந்திருக்கும் காலம் இது. பழமைக்கும், மூடநம்பிக்கைக்கும் சாவுமணி அடிக்கப்பட்டு வருகிறது. மனித சமுதாயத்தின் உயர் பண்பை புல்லரிக்கும் நூல்களைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டுமென்று துடிக்கின்றனர் சிந்தனையாளர்கள். அறிவற்ற அநாகரீகச் செயல்களுக்குப் புதைகுழி தோண்டப் பட்டு விட்டது. ஆரியத்தை அடக்கம் செய்திருக்கும்சவப்பெட்டியின்கடைசி ஆணியும் அடிக்கப்படப் போகிறது. இனி அழிய வேண்டியதுதான் ஆரியக் கலாச்சாரமும் அதன் வளர்ப்புப்பண்ணையாகிய அரசாங்கமும்.

பகுத்தறிவும், சிந்தனா சக்தியும் பரவுவதைத் தடை செய்யும் சட்டம் போடுவதிலேயே சென்னை அரசாங்கம் அதிகமாகக் கவனம் செலுத்தி வருகிறது. மக்களை அறிவற்ற காட்டுமிராண்டிகளாக்கி நாயையோ, கழுதையையோ காங்கரசின் பெயரால் நிறுத்தினாலும் ஓட்டுப் போடுங்கள் என்று கூறி ஓட்டு வாங்கிக்கொண்டு சட்டசபைக்குச் சென்றுவிடலாமென்று நினைக்கிறார்கள் போலும்? மதத்தை வளர்ப்பதும், ஆரியத்திற்கு மக்களை அடிமையாக்கும் இழி செயலும் இன்றைய மந்திரிகளுக்கு நிர்மாணத் திட்டமாகி விட்டது. காட்டுமிராண்டித்தனத்திற்கு மக்களை அழைத்துச் செல்லும் கபோதிப் போக்கில் போகின்றது இன்றைய அரசாங்கம். பார்ப்பனீயத்தின் பாதந்தாங்கிகளாக—அடிமையாக உள்ள இன்றைய அரசாங்கம் இன்னமும் இருக்கவேண்டுமா என்ற கேள்வி திராவிடர்களிடம் பிறந்து விட்டது. இந்த நிலை நீடிக்குமானால் விளைவு விபரீதமாய்ப் போய்விடும் என்பதை ஆட்சி பீடத்திலிருந்து கொண்டு ஆரியத்தின் காலை நக்கி வாழுகின்ற திராவிட அமைச்சர்களுக்கு வெட்கத்துடன் கூறிக்கொள்கிறேன். கொள்கையையும்போக்கையும் உடனடியாக மாற்றிக்கொள்ளுங்கள். சட்டம் மக்களுக்காக இருக்க வேண்டுமே தவிர, மக்கள் சட்டத்திற்காக அடங்கி நடக்க வேண்டுமென்ற பாசிசப் போக்கை விட்டு விடுங்கள். ஆரியத்தின் புன்சிரிப்பைப் பெற்றால் தவிர மந்திரி சபையில் இருக்க முடியாதென்று தோன்றினால் உடனே ராஜிநாமாச் செய்து விட்டு வெளியேருங்கள். மக்கள் மன்றம் உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கும். இல்லையேல் உங்கள் போக்குத் தற்கொலைத் திட்டமாக முடிந்து விடும்.

புரட்சிக் கவிஞரின் "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற நாடகத்தில் ஆபாசங்கள் நிறைந்திருப்பதாக இன்றைய அரசாங்கம் கூறுகிறது. பார்ப்பனர்கள் அவர்களிடம் சொன்னதைத் திருப்பிச் சொல்லியிருக்கிறார்களே தவிர சொந்த மூளையைக் கொண்டு அல்ல என்பது தெளிவாய்ப் புரிகிறது. ஆரியத்தின் சூழ்ச்சிகளைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார் இந்த நாடகத்தின் வாயிலாகக் கவிஞர் பாரதிதாசன். தங்கள் சூழ்ச்சிகள் மக்களுக்குத் தெரிந்து விட்டால் தங்களின் சுரண்டல் திட்டத்தில் மண் விழுந்து விடுமே என்று உணர்ந்த ஆரியத்தின் சூழ்ச்சிதான் இந்த நாடகத்திற்கும் தடை விதிக்கப்பட்டதற்குக் காரணம். பார்ப்பான் கையொப்பமிடு என்று கூறுமிடத்தில் கையொப்பமிடும் இன்றைய அடிமை மந்திரிகளில் யாருமே பாரதிதாசனின் இரணியன் நாடகத்தைப் பார்த்திருக்கவும் மாட்டார்கள், அந்த நாடக நூலைப் படித்திருக்கவும் மாட்டார்கள். இரணியன் நாடக நூலைப் படித்த அல்லது நாடகம் நடிக்கப்பட்ட பொழுது பார்த்த எந்தச் சாதாரண அறிவுள்ள மனிதனும் அதில் ஆபாசமிருப்பதாகக் கூறமாட்டான். ஆனால் அதில் ஆபாசமிருப்பது இந்த அதிசயப் பிறவிகளுக்குத்தான் தெரிந்திருக்கிறது போலும்.

இன்றைய நாடகங்கள் அறிவிற்குப் பொருத்தமற்றதாகவும் ஆபாசக்களஞ்சியமாகவும் திகழ்கின்றன. புராணக் குப்பைகளுக்குப் புதுமெருகும் புதிய பெயர்களுமிடப்பட்டிருக்கிறதே தவிர கருத்துகள் பழமைக்கு இழுத்துச் செல்பவைகளாகவே இருக்கிறது. ஆண்டவன் லீலாவிநோதக் கட்டங்கள் வரும். அரை நிர்வாணக் காட்சிகள் தோற்றமளிக்கும். கோபியர்களுடன் கண்ணன் கொஞ்சி விளையாடும் காட்சி இருட்டறை ரகசியமாகவிருக்கும். இதுபோன்ற பரந்தாமனின் லீலாவிநோதங்களைப் பார்ப்பதே பரலோகத்திற்குப் போவதற்கு எற்ற சாதனமென்று ரசிப்பார்கள் பக்தசிகாமணிகள். கையில் மதுக்கிண்ணத்துடன் மன்னனின்முன் ஆடுவாள் ஒரு அணங்கு முழு நிர்வாண கோலத்துடன். அவளை அணைத்துப் பிடித்து அதரத்தில் முத்தமிடுவான் மதுவுண்ட மன்னன். திரை விழும். சில நிமிடங்கள் இருட்டாகவிருக்கும். இதுதான் தக்கசமயமென்று அருகில் அமர்ந்திருக்கும் கன்னியை விரகதாபத்துடன் பார்ப்பன் இளைஞன். வெடுக்கென்று முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொள்வார்கள் சில பெண்கள். கல்லூரியிலே பயின்று

(தொடர்ச்சி 14-ம் பக்கம்)

மதம் ஒழியட்டும்!

மக்களைக் காட்டுமிராண்டி காலத்திற்கு அழைத்துச் செல்வதுதான் மதம். போக போகாதிகளிலே புரள, யோக யோகதிகளின் பெயரைக் கூறிடும் எத்தர் கூட்டத்தின் சித்தத்திலே நெளியும் புல்லறிவுதான் மதம். நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாக இருப்பதுதான் மதம். அறிவுக்கு—சிந்தனைக்குத் திரையாக இருப்பதுதான் மதம்.

அக்ரமம்—ஆபாசம் இவைகளின் இருப்பிடமாக மத நிலையங்கள் உள்ளனவெனில் மத மயக்குற்றுக் கிடக்கும் மக்கள் மனத்தெளிவு பெறுவதேது.

நம் திராவிட மக்களிடையே புகுத்தப்பட்டுள்ள மதம், ஆபாசக் கதைகளுக்கு இருப்பிடம். மனிதாபிமானத்தை மயக்கும்படுகளம். குடி, கொள்ளை, கொடுமை, நயவஞ்சகம் இவற்றிற்குப் பயிற்சிக் கூடம். இத்தகைய குப்பையை நம் மக்களிடையே விட்டுவைத்து, மேடைமீதேறி "நாம் எல்லோரும் சமமென்பதுறுதியாச்சு சுதந்தர இந்தியாவிலே" என்றெல்லாம் பேசினால் பயன் ஏற்படுமா?

ஆறுதலைச் சாமியும், முக்கண் சாமியும், ஆயிரங்கண்ணனும், ஆனைமுகச்சாமியும், ஆளிவாய்ச் சாமியும், பருந்தேறுபவரும், ரிஷி பத்தினிகளிடம் ரசானுபவத்தைக் காட்டி நடுநிசியில் செல்பவரும், இத்தியாதி திருவுருவங்களும், திருக்கல்யாண குண விசேஷங்களும்கொண்ட கடவுள்களை நம்மிடையே தொழவைத்துவிட்டு வீறுகொண்டெழுக! தோள்தட்டி முன் வருக! என்று கோஷமிட்டுக் காணப்போகும் பயன் என்ன?

அறியாமை என்ற இருளிலிருந்து அறிவொளி பெறவேண்டுமானால், விஞ்ஞான வேகத்தில் நாடு முன்னேற வேண்டுமானால், 'புதியதோர் உலகு செய்வோம், கெட்ட போரிடும் உலகை வேருடன் சாய்ப்போம்' என்ற சிந்தனையாளர்களின் கனவு, லட்சியம் எல்லாம் நிறைவேற வேண்டுமானால் மதமென்ற 'எலும்புருக்கி' நோய் ஒழிக்கப்படவேண்டும். இந்த நோயை ஒழிக்கச் சிந்தனை என்ற 'இன்ஜெக்ஷன்' தேவை.

நாட்டிலே மதத்தைப்பற்றி பல கருத்து வேறுபாடுகளிருக்கின்றன. ஒரு மதம் பெண்டிர்களைக் காட்டி ஆசை வலைவிரிக்கிறது. ஒரு மதம் இன்ப உலகுக்கு வழி காட்டுகிறது. ஒரு மதம் தேவருலகிலே அமரனாக வாழலாம் என்று கூறுகிறது. ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு கடவுள். அந்தந்த மதத்திற்கு அவைதான் பெரியவை—மேலானவை.

எவராலும் எடுத்துரைத்தற்கரிய ஏட்டிலே தீட்டிதற்கரிய எண்ணற்ற—கணக்கற்ற மதங்கள் எத்தனையோ உள்ளன இந்நாட்டில். அவைகளெல்லாம் வெவ்வேறு வழிகளில் மோட்சத்தை அடைவதற்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

இவ்வாறு மதக்கட்சிகள் எழவே அறியாமை, சுரண்டல், ஏய்த்தல் எல்லாம் இந்நாட்டிலே தலைவிரித்தாடத் தொடங்கின. காமாந்தகாரமும் நயவஞ்சகமும் பித்தலாட்டமும் நிறைந்த ஒரு நச்சரவுக் கூட்டம் தங்களைத் தாங்களே உவமையாக—'மாடலாக' வைத்து தெய்வங்களை ஏற்படுத்தியது.

மோட்சலோகத்தையும் நரக லோகத்தையும் எந்தப் பார்ப்பானாவது பார்த்ததுண்டா? அவன் பார்க்காத இடத்திற்கு நம்மை அனுப்புகிறேன். இப்பவே 'ரீட் ரிசர்வ்' செய்ய இன்னல்கள் பல படுக—யாக யோகாதிகள் செய்க, என்று சொல்லி நம் மக்களிட மிருந்து செல்வங்களைக் கொண்டு சென்று அவனது பிள்ளைகளைப் படிக்கவைக்கிறானே. ஆனால் நீமட்டும் ஏமாந்துமோட்ச லோகத்திற்குப் போக பொன்னும் பொருளும் தந்துவிட்டு உனது பிள்ளைகளைப் படிக்கவைக்க இயலாமல் திண்டாடித் தெருவில் நின்று தத்தளிக்கிறாயே, சிந்தித்தனையா?

"தனக்குவமை இல்லாதான் றாள் சேர்ந்தார்க்கல்லான் மனக்கவலை மாற்றலரிது; கோளிற் பொறியிற்கு குணமிலவே எண் குணத்தான் றாளை வணங்காத்தலை" என்று குறளில் கூறிய குணங்கள் யாவும் நீங்கள் வணங்குகிற கடவுள்களுக்குக் கிஞ்சித்தேனும் உண்டா?

திருமூர்த்திகளின் நடத்தைகளை ஒருவன் பின்பற்றி நடக்க முடியுமா? அந்நடத்தைகளை ஒரு ஆணாவது, பெண்ணாவது கையாளுவதைக் கண்டு பிறர் குறை கூறினால் என் மகன் கிருஷ்ண பக்தன் —சுப்பிரமணிய பக்தன், என் மகள் பார்வதி பத்தினியாகையால் அவர்களுடைய திருவிளையாடல்களைப் பின்பற்றுகிறார்களென்று கூற முடியுமா? ஒரு பெண் தனது கணவனைப் பார்த்து, உனக்கும் தலை ஒன்று உனது நண்பனுக்கும் தலை ஒன்று, ஆகையால் யார் எனது கணவன் என்ற இனமுறை தெரியாமல் உனது நண்பனைக் கணவனாக எண்ணி அவனைப் புணர்ந்தேன் என்றால், அவனது மனம் குளிருமா? இராவணன் பார்வதியைச் சிவனிடம் பிச்சையாகக் கேட்டது போல ஒருவனிடம் சென்று அவன் மனைவியைக் கேட்டால் அவன் உள்ளம் துடிக்குமா துடிக்காதா?

வீர இனத்தவரே! இந்தத்தீயச் செய்கைகளை இன்னமும் திருவிளையாடல்கள் என்று சொல்லத் துணிவதும் தீதே.

தீயர்களின் முயற்சியால் உண்டாக்கப்பட்ட, கயமைத்தன்மைகள்—பரஸ்திரீலோலர்களின் திருவிளையாடல்கள் நிறைந்த மதம் நமக்குத் தேவையில்லை. சிறுமைகள்—நள்ள நரிச்செயல்கள் ஒழிந்தாக வேண்டும். மண்ணும் விண்ணும் தமக்கே சொந்தம், மதியும் நிதியும் தமக்கே உரிமையானது என்று கூறிடும் ஆரியப் புல்லுருவிகள் ஒழிக்கப்படவேண்டும்—மதமென்ற நச்சு நோய் ஒழிய.

இங்கே ஒரு தாழ்த்தப்பட்ட ஏழை மாணவன் படிக்க வசதியின்றி—பணமின்றித் தவிக்கும் பொழுது அங்கே ஒரு தனவந்தர் ஆனைமுகத்தோனுக்கு ஒரு பெரிய கோவில்கட்டி, அதற்குக் கும்பாபிஷேகம் நடத்திப் பார்ப்பனர்களுக்கு ஏராளமான தானம் கொடுப்பார், மோட்ச லோகத்திலே 'ரீட் ரிசர்வ்' செய்யலாம் என்ற எண்ணத்துடனே.

சமுதாயம் அவ்வளவு தூரம் பழமையிலே, வைதீகக் குட்டையிலே மூழ்கியிருக்கிறது. நாட்டின் முன்னேற்றத்தைப் புறக்கணித்து மறுமைக் குரிய வழிகளைப்பற்றி

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

காமராஜரின் மயான வைராக்கியம்!

ராமராஜ்யத்துக்கு ஏற்ற அனுமார்.

★

மயான வைராக்கியம்—பிரசவ வைராக்கியம் என்பார்கள். அதென்னவென்றால், ஒரு பிணத்தை சுடுகாட்டுக்குக் கொண்டுபோய் அதை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருக்கும் பொழுது மரத்தடியில் உட்கார்ந்திருப்பவர்களுக்குள் "என்ன பாருங்கோ! இதுக்குள்ளேதான் நான் பெரியவன், நீ பெரியவன், ஓஹோ உனக்கு அப்படியாச்சா? ஒரு கை பார்த்துவிடுறேன் என்றெல்லாம் பேசுகிறோம். கண்ணை மூடிட்டா தீந்தது. தூக்கிக்கொண்டு வந்து தீக்கிரையாக்கி விடுகிறோம்" என்பனபோன்ற வேதாந்தப் பேச்சுகள் நடைபெறும். பிறகு வீடு சென்றவுடன் அதெல்லாம் மறந்துவிட்டு தனது சுபாவ புத்திப்படி நடக்க ஆரம்பித்து விடுவோம்.

அதுபோலவேதான், பிரசவத்தின்போது பெண்கள் நினைப்பார்களாம் இனிமேல் புருஷ சாவகாசமே கூடாது என்று. ஆனால் கையிலே இருக்கிற குழந்தைக்கு மாதம் ஆறு ஆவதற்கு முந்தியே மீண்டும் வயிற்றிலே நாலுமாத கர்ப்பம் ஆகிவிடுகிறது.

இதையெல்லாம் நாம் பார்த்தும், கேட்டும் வருவது போலவே தமிழ்நாடு காங்கரஸ் தலைவர் காமராஜர் கதையும் இருந்து வருவதைக்கண்டு பரிதாபப்படுகிறேன். தோழர் ஆச்சாரியாரும் அவரது சகாக்களும் செய்கிற சூழ்ச்சிகளைக் காணும்போதெல்லாம் தோழர் காமராஜருக்குக் கோபம் மூக்குக்குமேல் பொத்துக்கொண்டு வந்துவிடுகிறது. அந்த சமயத்தில் எவராலும் தடுக்கமுடிவதில்லை. ஓரே வேகமாகப் போய்விடுகிறார். ஆனால் அடுத்த நிமிஷமோ என்றால், கொஞ்சம் முந்தித் துள்ளிக் குதித்த மனுஷன் இந்த சாது புருஷன்தானா என்ற நிலைக்கு வந்து விடுகிறார்.

உத்தமர் காந்தியார் பழனி விஜயத்தின்போது அன்பர் ஆச்சாரியார் தோழர் காமராஜர் முகத்தில் கரி பூசினது அனைவருக்கும் தெரியும். ஆனால் அன்பர் ஆச்சாரியாரைத் தோழர் காமராஜர் டில்லி சென்று தரிசிக்கத் தவறவில்லை.

அதெல்லாம் தான் தொலையட்டும், அதெல்லாம் வெள்ளைக்காரன் காலத்தில் நடந்த சங்கதி. நம்ம சர்க்காரின் கவர்னர்-ஜெனரல் என்ற ஹோதாவில் சென்னைக்கு அன்பர் ஆச்சாரியார் வருகிறாரே அவரை மாலையிட்டு வரவேற்கலாம் என்ற ஆசையோடு தோழர் காமராஜர் விமான நிலையத்திற்குப் போய் முதல் வரிசையில் நின்றிருக்கிறார். எப்படியோ சட்டத்தைக் கண்டுபிடித்து முன் அனுமதியில்லாமல் கவர்னர்-ஜெனரலுக்கு மாலை போட யாருக்கும் உரிமை இல்லை என்ற சாக்குச் சொல்லித் தோழர் காமராஜர் இரண்டாவது வரிசைக்கு அனுப்பப்பட்டு விட்டார். வந்துவிட்டது கோபம்! ஓஹோ! அப்படியா சங்கதி. இனி இந்த ஒரு நிமிஷமும் இருக்கமுடியாது என்று சொல்லி 'விர்' என்று வெளியேறிவிட்டார். யார் யாரோ தடுத்தும் பயனில்லை. இந்தச்சேதியைப் பத்திரிகைகளில் பார்த்ததும் உள்ளபடியே பயந்தேன். இதன் விளைவு என்னவாகுமோ? மந்திரி சபையே மாறுமோ? என்றெல்லாம் சந்தேகித்தேன். ஆனால் மறுநாள் பத்திரிகையில் ஆச்சாரியார் அவர்களின் ஸ்டேடியம் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது தோழர் காமராஜர் பெயர் தவறாமல் "தினமணி"யில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிறகுதான் புரிந்துகொண்டேன் இவர் புத்திதெரிந்துதான் இவரை அவமானப்படுத்துகிறவர்கள் செய்கிறார்கள் என்பதை. அதன் பிறகு எனக்கு ஒரு ஞாபகம் வந்தது. அதாவது சமீபத்தில் அன்பர் ஆச்சாரியார் நான் கவர்னர்-ஜெனரல் அல்ல; ஸ்ரீராமர்தான் கவர்னர்—ஜெனரல் என்று சொன்ன விஷயம். ஆகவே ராமருக்கு ஒரு அனுமார் வேண்டுமே? தன் பலம் எவ்வளவு என்பதை அறியாத ஒரு தென்னாட்டு வீரன் வேண்டுமே என்ற நினைவு தோன்றியவுடன் அதற்குச் சரியான பேர்வழி காமராஜர் தான் என்று! நன்குதெரிந்தது. ஆகவே அனுமார் பலம் படைத்த காமராஜரே! தாங்கள் ராமருடன் அயோத்திக்கே சென்றுவிடுங்கள்! இங்கு சுக்ரீவன் (ஓமந்தூரார்) நாடாளட்டும். அப்பொழுதுதானே பூர்ண ராமராஜ்யம் ஏற்படமுடியும்.

சிறுகதைப் போட்டி

★

நமது உதவி ஆசிரியர் கைது செய்யப்பட்டிருப்பதால் அவர் பொறுப்பில் உள்ள போட்டிக்குரிய சிறுகதைப்பகுதி ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. (ஆ-ர்)

இதுதான் ஜனநாயகமா?

★

நீங்கள் சட்டம் இயற்றுகின்றீர்கள். எதை அடிப்படையாகக் கொண்டு சட்டம் இயற்றுகின்றீர்கள்? தினசரிப் பத்திரிக்கைகளைப் படித்தும், பொதுமக்கள் கருத்தை கணக்கிட்டும், தேர்தல் கூட்டத்தில் பேசியும், மக்கள் விருப்பத்தை அறிந்துமா நீங்கள் சட்டங்கள் இயற்றுகின்றீர்கள்? இவ்விதம் செய்வதாக நீங்கள் சிந்திக்கின்றீர்கள். ஆனால் உண்மை என்னவென்றால் சட்டசபையில் உள்ளோர் தங்களுக்கு எது நல்லது—கெட்டது என்று தோன்றுகிறதோ அதன் பேரிலேயே சட்டம் இயற்றுகின்றனர்.

சட்டசபை மண்டபத்தில் கவர்னர்—ஜெனரல் பேச்சு.

●

வடமொழியை நுழைத்து அதன் மூலம் வர்ணாஸ்ரமத்தை நுழைத்து பெருமை மிக்க திராவிட மக்களைச் சூத்திரராக்கி என்றென்றும் அடிமைகளாக ஆக்கி வைத்துக் கொள்ள வைத்திநாதய்யர், வரதாச்சாரிக்கூட்டம் செய்யும் பச்சைப் பித்தலாட்டம் தான் இது.

பெரியார்.

ஆச்சாரியார் பேச்சும்—எதிரொலியும்.

★

● பிறர் உணர்ச்சிகளை நாம் புண்படுத்தக்கூடாது. அவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு மதிப்புக்கொடுக்கவேண்டும்.

கவர்னர்-ஜெனரல்.

கவர்னர்-ஜெனரல் வருகையை முன்னிட்டு, கருப்புக்கொடி பிடித்து எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்ட விரும்பியதைத் தடை செய்து நம்ம பெரியார் அவர்களையும், மற்றும் பல தோழர்களையும் கைதுசெய்து நல்ல பெயர் வாங்க நினைத்த நமது பிரதமர் ரெட்டியாருக்கு நல்ல சூடு.

● குழந்தைகளின் மனோ தத்துவத்தையும், மனிதர்களின் மன தத்துவத்தையும் கவனித்தால் ஒன்றை வலுக்கட்டாயமாகப்படுத்தினால் அதை மீறவேண்டும் என்ற நேர்மாறான உணர்ச்சியே ஏற்படும்.

கவர்னர்-ஜெனரல்.

இந்தியைக் கட்டாயப்படுத்துவதினால் ஏற்படும் விளைவை இதற்கு மேல் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது?

● தாய் பாஷையையோ அத்துடன் சம்பந்தம் உள்ள வேறு பாஷையையோ இளம் மாணவர்கள் உபயோகிக்கக்கூடாது என்று சொல்வதில் லாபம் இல்லை.

கவர்னர்-ஜெனரல்.

கேட்டீரா, கல்வி மந்திரியாரே! இப்பொழுதாவது புரிந்துகொண்டீரா? இரண்டாவது மொழியாக வைத்திருப்பதில் எதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று. தமிழ் நாட்டில் தமிழுடன் சம்பந்தம் உள்ள தெலுங்கு, கன்னடம், மலையாளம் இவைகளுக்குக் கட்டாயமாக ஆசிரியரை நியமிக்காமல் தமிழ் மொழிக்கு சம்பந்தம் இல்லாத இந்தி மொழிக்கு ஆசிரியரை நியமித்திருப்பது தவறு என்று இப்போதாவது உணர்வீரா?

● புத்திசாலித்தனத்துக்குப் பெயர்போன சென்னை இப்போது புத்திசாலித்தனத்துக்கு வெகு தூரத்திலிருக்கிறது என்பதைக் காண வருத்தப்படுகிறேன்.

கவர்னர்-ஜெனரல்.

பிரதமர் ரெட்டியார் ஆட்சிக்கு அருமையானதொரு சர்டிபிக்கேட்!

● தங்களுடன் கைகுலுக்கவில்லை; தங்களைப் பார்த்துப் புன்னகை புரியவில்லை; தங்கள் வீட்டுக்கு வரவில்லை; தங்கள் அழைப்பை ஏற்கவில்லை என்றெல்லாம் கோபித்துக்கொள்ளுகின்றனர்.

கவர்னர்-ஜெனரல்

எத்தனையோ "குசலம் மூட்டிகள்" அவரிடம்போய் யார் யாரைப் பற்றியோ கோள் சொல்லியிருக்கிறார்கள் என்பது வெளிப்படுகிறதல்லவா?

● சென்னையில் நான் ஜாதியைப் பற்றிப் பேசினால் பிராமணர்கள், நாயுடுக்கள், ரெட்டியார்கள் பற்றிப் பேசுவதாக எண்ணிக்கொள்வார்கள். ஒருவர் இன்னொருவருக்குத் தீங்கு செய்ய மாட்டார். சென்னையில் எல்லாம் உத்தியோகங்கள் பற்றியதாகும்.

கவர்னர்-ஜெனரல்.

பார்ப்பனத் தோழர்களே! பயப்படாதீர்கள். பதவிகளுக்காக அலையும் ரெட்டியார்களிடம் அதைக்கொடுத்துவிடுங்கள். ரெட்டியாரே ஆளட்டும்! அதனால் உங்களுக்குத் தீங்கு செய்யமாட்டார். இது உறுதி! நீங்கள் சொல்லுகிறபடியெல்லாம் நடப்பார். பார்ப்பனீயத்தை எதிர்க்கிற திராவிட கழகத்தாரை அவரே ஒழித்து விடுவார். காங்கரசிலுள்ள பார்ப்பனரல்லாதவர்கள் விரும்புவதெல்லாம் பதவி! அதைக் கொடுத்துவிட்டு காரியத்தில் நீங்கள் கெட்டியாக நடவுங்கள் என்று வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் உங்களுக்கென்ன புரியாதா? என்ன?

● சோம்பேறியாக இருக்காதீர். ஏதாவது வேலை செய்யுங்கள். சட்டசபை அங்கத்தினர்கள் மகாத்மாஜி படத்திலிருந்து இதையும் கற்றுக்கொள்வர் என நம்புகிறேன்.

கவர்னர்-ஜெனரல்.

சட்டசபையில் இப்படிச் சொல்லியும் பேசாமல் உட்கார்ந்துகொண்டிருந்த சட்டசபை மெம்பர்களை சோம்பேறி என்பதா? சோதாக்கள் என்பதா? ஒன்றுமே விளங்கவில்லை.

● 40-கோடி மக்கள் ஒரு ஜனநாயக சர்க்காரில் ஒன்றாகச் சேர்ந்து காரியங்களைச் செய்வது எவ்வளவு சிரமம் என்பது கடவுளுக்குத் தெரியும்.

கவர்னர்-ஜெனரல்.

வாஸ்தவம், இந்தப்பாவி மனுஷர்களுக்குத் தெரியாததினால் தான் திராவிட நாட்டுப் பிரிவினையை எதிர்க்கிறார்கள்! ஆச்சாரியார் சொன்ன பிறகாவது புரிந்துகொள்கிற தன்மை இருக்கிறதா பார்ப்போம்.

பனியாக்களை ஏய்த்தான் பையன்!

★

பம்பாய்க்கருகே சென்று கொண்டிருந்த ஒரு ரயில் வண்டியின் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் ஆறு பருத்த பனியாக்கள் தாராளமாக இடத்தை அடைத்து உட்காந்து கொண்டு மற்றவர்களுக்கு இடம் விடாமல், பேசிக்கொண்டிருந்தார்களாம். பந்த்ரா ஸ்டேஷனில் வண்டி நின்றதும் இட நெருக்கடியால் அவ்வண்டியில் ஏறிய பலமாணவர்கள் இடமில்லாமல் நின்றுகொண்டேயிருந்தும், பனியாக்கள் அசையாமல் இருந்தார்களாம். எப்படியோ ஒரு மாணவன் ஒரு பனியாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். உடனே தன்கைக்குட்டையை எடுத்து நெற்றியில் இறுகக்கட்டிக் கொண்டு, இரு கைகளிலும் தலையை அழுத்திப் பிடித்துக் குனிந்து வாந்தியெடுப்பதுபோல் பாவனை செய்தானாம்

இதைக்கண்ட பனியாக்கள் அறுவரும் பயந்து எழுந்து அப்பால் ஓடவே நின்று கொண்டிருந்த எல்லாமாணவர்களும் இடம் பிடித்துக் கொண்டனராம். இந்நிகழ்ச்சியைக் கண்ட பிரயாணிகள் விழுந்து விழுந்து நரைத்தார்களாம்.

திராவிடத் தந்தை பெரியார், — — தளபதி, தோழர்கள் கைது.



பெரியார் ஈ. வெ. ராமசாமி.

தளபதி சி. என். அண்ணாதுரை.

சென்ற 22-8-48ந் தேதி காலை 10-மணிக்கு சென்னை மவுண்ட்ரோடு மீரான் சாயபு 1ம் எண் இல்லத்தில் மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது போலீஸ் உதவிக் கமிஷனர் நேரடியாகக் கூட்டத்திற்கு வந்து "நீங்கள் எல்லோரும் கைதுசெய்யப்படுகிறீர்கள்" என்று குறிப்பிட்டு அங்கு வீற்றிருந்த அனைவரையும் அப்படியே வளைத்து போலீஸ் வண்டிகளில் ஏற்றி போலீஸ் கமிஷனர் ஆபீசுக்கு அழைத்துச் சென்றார்.

திராவிடத் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும், நிர்வாகக் கமிட்டித் தலைவர் தோழர் டி. பி. வேதாசலம், தளபதி சி. என். அண்ணாதுரை, மற்றும் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களும், கூட்ட நடவடிக்கைகளைப் பார்க்கவந்திருந்த கழக முக்கியஸ்தர்களும் உட்பட சுமார் 100-பேர்களைக் கைது செய்தனர். இவர்கள் அனைவரையும் அன்று மாலையிலிருந்தே சென்னை பெனிடென்ஷயரி (சிறை) யில் வைத்திருக்கின்றனர்.

கழகத் தோழர்களுக்குப் பெரியார் செய்தி.

திராவிடர் கழக அங்கத்தினர்களுக்கும், அனுதாபிகளுக்கும் பெரியார் அடியிற் கண்ட செய்தியை விடுத்துள்ளார்:

இன்று என்னுடைய ஜாகையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது திடீரென்று, சுமார் 100 பேரையும் சர்க்கார் கைது செய்துவிட்டார்கள். இந்தச் செய்தியைக் கேள்வியுறும் எல்லாத் தோழர்களும் ஆத்திரப்படாமல், அவசரப்படாமல், நான் ஏற்கெனவே விடுத்துள்ள அறிக்கைகளிலே கண்டபடி அவரவர்களின் கடமையை அமைதியாயும், பொறுமையாகவும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஊர்வலங்கள், மறியல் போன்ற காரியங்கள் மிக அமைதியான முறையில் நடைபெறவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். வெற்றி நமதே.

22—8—48

—ஈ. வெ. ராமசாமி.

பெரியார் எச்சரிக்கை !

★

இந்த மந்திரிசபைக்கு அற்ப ஆயுசுதான். நமது போராட்ட முடிவுக்குள் ஒருக்கால் பல மந்திரிசபைகளையும் காண நேரிடலாம். நானும், நமது இயக்கமும் இருக்கும் வரைதான் இந்த மந்திரிசபைக்கு உயிர் இருக்க முடியும்.

நமதியக்கம் நசுக்கப்பட்டால் அன்றே இந்த மந்திரி சபையின் ஆயுளும் முடிந்து விடலாம். நமக்குப் பிறகு பார்ப்பனர்கள் இந்த திராவிட மந்திரிசபையை அய்ந்தே நிமிஷத்தில் காலை வாரி விட்டுவிடுவார்கள்.

20—8—48 தேதி பேச்சு.

குடி அரசு

28—8—48 சனிக்கிழமை.

சர்க்காரைக் கவிழ்க்கும் அயோக்கியர்கள் நாங்கள் அல்ல !

★

நமது நாட்டில் இப்பொழுது நடைபெற்று வரும் சர்க்கார—தங்களை மக்கள் சர்க்கார் என்றும், மக்களுக்காகவே தாங்கள் பதவியிலிருப்பதாகவும் கூறிவருகிறார்கள். சொல் மிக அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் செயலைப் பார்க்கும்போது ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருப்பதாதவே மக்கள் நினைக்க வேண்டியிருக்கிறது.

ஜனநாயகம் என்று சொன்னால் (1) அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல், (2) அரசாங்கத்தின் போக்கைக் கட்டுப்படுத்துதல், (3) அரசாங்கத்தின் பிற்போக்கான செய்கைகளை வெளிப்படையாகக் குறைகூறுவது போன்ற உரிமைகள் பொதுமக்களுக்கு உண்டு என்றுதான் அர்த்தம். அவ்வாறில்லாமல் ஒரு கட்சி பதவிக்கு வந்துவிட்டால் அந்தக் கட்சி பதவியில் அப்படியே நீடித்திருக்கவேண்டும் என்பதற்காவே பதவியிலிருப்பவர்கள் என்ன செய்தாலும் அதைப் பற்றி எதிர்த்துப் பேசக்கூடாது என்பது அல்ல.

தேர்தல் காலங்களில் மட்டும்தான் கட்சிரீதியில் வேலைசெய்து அவரவர்கள் கட்சி பதவிக்கு வரவேண்டும் என்று பாடுபட வேண்டும். அதன்பிறகு கட்சி அனுதாபத்தையோ, அல்லது கட்சி நலன்களையோ சிறிதும் கருதாமல் நாம் மேலே குறிப்பிட்ட பொக்கிஷம் போன்ற மூன்று உரிமைகளைப் பாதுகாக்க மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். பொதுமக்கள் ஆதரவில்லாமல் சர்க்கார் கொண்டுவரும் மசோதாக்களை எதிர்க்கவும், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறிவிட்டதென்பதை எடுத்துக்காட்டவும், அதிகார வர்க்க சட்டதிட்டங்களையும், முக்கியமாக ஜனநாயகத்தின் அடிப்படையையே தகர்த்தெறியக் கூடிய போக்கையும் கண்டிப்பதற்காகவும் சாதாரணப் பாமர பிரஜைக்குக்கூட சுதந்தரம இருக்கவேண்டும்.

ஆனால் நாம் காண்பதென்ன? தொழிலாளர்கள் ஏதாவது கூறினால் இதெல்லாம் கம்யூனிஸ்டுகளின் தூண்டுதல்-கம்யூனிஸ்டுகள் இப்போதுள்ள சர்க்காரைக்கவிழ்க்கச் சதி செய்கிறார்கள் என்ற பழிபோட்டு தொழிலாளர்களின் பிரஜா உரிமைகள் பறிக்கப்பட்டு விடுகின்றன.

பதவியிலிருக்கும் சர்க்கார் அப்படியே இருக்கவேண்டும் என்பது தான் ஜனநாயகமா? அதை மாற்றுவது (கவிழ்ப்பது) குற்றமென்று சொல்லப்படுமானால் பிரகாசம் மந்திரிசபையைக் கவிழ்த்தவர்களெல்லாம் யார்? இப்போதுள்ள ஓமாந்தூரார் மந்திரிசபையைக் கவிழ்க்க சில மாதங்களுக்கு முன்னர் முயற்சி செய்தவர்கள் யார்? ஏன்—இப்பொழுதும் ஓமாந்தூரார் மந்திரிசபைக்கு என்னென்ன தொல்லை கொடுக்கவேண்டுமோ அவ்வளவையும் உள்ளுக்குள்ளிருந்துகொண்டே செய்துகொண்டு வருகிறவர்கள் யார்? இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால் இப்போதைய சர்க்காரைக் கவிழ்க்கவோ, சர்க்காருக்குத் தொல்லை கொடுக்கவோ விரும்பும் ஒன்றாம் நெம்பர் அயோக்கியர்கள் யார் என்பது தெரியாமல் போகாது.

உண்மையில் திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரை தலைவர் பெரியார் அவர்கள் பல தடவை எடுத்துக் கூறிய பிறகும், திராவிடர் கழகத்தாருக்கு சர்க்காரைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகவோ, ஏதோ ஒரு தொல்லை கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகவோ யாராவது கூறுவார்களானால், ஒன்று அவர்கள் அரசியலே தெரியாத அப்பாவிகளாக இருக்கவேண்டும்; இல்லையேல் எல்லாம் தெரிந்துகொண்டே வேண்டும் என்று கோயபல்ஸ் பிரசாரம் செய்கிற அயோக்கியர்களாய் இருக்கவேண்டும். சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு ஒரு ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த தோழர் சிவ ஷண்முகம் சட்டசபைத் தலைவராக இருக்க மற்றவர்கள் சம்மதிப்பதற்கும், எவ்வளவு முயற்சி செய்தாலும் ஓமாந்தூராரைக் கவிழ்த்தாலும் மற்றொரு சுப்பராயனைத்தான் பிரதமராகக் கொண்டுவரமுடியும் என்று மற்றவர்கள் நினைப்பதற்கும், யாருடைய சேவை காரணம் என்பதை தேசீயத் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம். அப்படியிருந்தும் ஏன் இப்போதைய மந்திரிகளையும், கவர்னர்-ஜெனரல் வருகையையும் எதிர்க்கிறீர்கள்? அதற்கு அடையாளமாகக் கருப்புக்கொடி ஆட்ட விரும்புகிறீர்கள்? என்று கேட்பீர்களானால் அதற்குப்பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திராவிடகழகத்தாருடையஆசையெல்லாம் திராவிடர்கள் அதாவது தோழர்கள் ஓமாந்தூர் ராமசாமி,

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

அவினாசிலிங்கம், பக்தவத்சலம் போன்றவர்கள் மந்திரிகளானால் மட்டும் போதாது. வந்துள்ள நமது மந்திரிகளுக்கு சுதந்தரம் வேண்டும்; அவ்வாறில்லாமல் அவர்கள் முதுதுப்புறம் கயிற்றைக் கட்டி அதை வடநாட்டான் கையில் வைத்துக்கொண்டு ஆட்டுகிற படியெல்லாம் ஆடவேண்டும் என்ற நிலை இருக்கக்கூடாது என்பதேயாகும்.

இதை வேறு பாஷையில் சொல்லவேண்டுமானால், இப்போதுள்ள மந்திரிமார்கள் இவர்களை மந்திரிகளாக்கிய மக்களின் விருப்பப்படி நடவாமல் தொட்டது தொண்ணூறுக்கும் ஹனுமான் (சென்னை சர்க்கார் விமானம்) மூலம் டில்லிக்குப் பறந்துசென்று அங்கு கொலு வீற்றிருக்கும் ஸ்ரீராமபிரானை (சமீபத்தில் அன்பர் ஆச்சாரியார் கவர்னர்-ஜெனரல் தானல்லவென்றும், ஸ்ரீராமர் தான் என்றும் சொல்லியிருக்கிறார்) யும், லட்சுமணரையும் கேட்டு அவர்கள் உத்திரவுப்படியே இங்கு காரியங்கள் செய்து வருகிறார்களே அந்த முறை ஒழிக்கப்படவேண்டும் — ஒழியும் வரை இவர்களைப் பகிஷ்கரிக்க வேண்டும்—அதுவும் சாத்வீகமாக ஜனநாயக உரிமைப்படி நமது எதிர்ப்பைக் கருப்புக்கொடி ஆட்டுவதன் மூலம் தெரிவிக்க வேண்டும் என்று கருதி அந்த முறையில் நாம் நடந்துவருகிறோம். ஆளுகிறவர்கள் நேர்மையுள்ளவர்களானால் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளவேண்டும்; "அதெல்லாம் முடியாது. நான் தொட்டுக் கொண்டு கூட தின்பேன். நீ என்ன கேட்பது?" என்ற தோரணையில் நடப்பதானால் கூட ஜனநாயக உரிமைப்படி திராவிட கழகத்தாரின் எதிர்ப்பிற்கு வசதியளிக்கவேண்டும். அவ்வளவு தாராள புத்தியில்லையென்றால், தைரியமாக "எங்களை எதிர்த்து யாரும் கருப்புக்கொடி ஆட்டக் கூடாது. எங்கள் ஜனநாயக அகராதி அப்படித்தான். மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி ஆட்டுவதைத் தடைசெய்யும் மசோதா சட்டம் ஆக்கிவிட்டோம்" என்றாவது சொல்லிவிடவேண்டும். அவ்வாறில்லாமல் மற்ற நாட்டாருக்கு இங்கு நடப்பது ஜனநாயகம் என்று காட்டிக்கொள்ளவேண்டும்; அதே நேரத்தில் இங்கு பழைய காட்டுராஜா கால ஆட்சி நடத்த வேண்டும் என்று ஆசைப் பட்டுக்கொண்டு கருப்புக்கொடி காட்ட விரும்புகிறவர்கள் மீது "பொதுஜன அமைதியைக் குலைப்பவர்கள்" என்ற பழி போட்டுச் சிறையில் வைப்பதென்றால் இதை என்ன ஆட்சி என்று சொல்வது என்பதே நமக்குப்புரியவில்லை. ஆனால் நாம் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. ஆளுகிறவர்கள் யாருமே தங்கள் நடவடிக்கைகளை எதிர்க்கிறவர்கள் மீது எதையோ ஒரு பழி சுமத்தித்தான் அடக்கப்பார்ப்பார்கள். இதை நாம் எதிர்பார்க்காத விஷயமல்ல.

ஆகவே திராவிடர் கழகத் தோழர்கள் எதற்கும் அஞ்சாது— ஆனால் பெரியார் அவர்கள் கட்டளைக்கு இணங்க—ஒரு எழுத்துப் பிசகாமல் அன்றாடும் அவரவர்கள் ஊர்களில் ஊர்வலங்களும், அடிக்கடி பொதுக்கூட்டங்களும் நடத்தி நமது போராட்டத்தில் வெற்றிபெறும்வரை சலியாது உழைக்க வேண்டுகிறோம். எந்த எந்த ஊர்களுக்கு மந்திரிமார்கள் வருவதாகத் தெரிகிறதோ அங்கு எல்லாம் தோழர்கள் கருப்புக் கொடி (மத்தியில் சிவப்பு இல்லாமல்) காட்டவேண்டுகிறோம். உலகிலுள்ள எல்லா ஜனநாயக நாடுகளிலும் கருப்புக்கொடி பிடித்தல் அனுமதிக்கப்பட்டே வந்திருக்கிறது. அப்படியிருக்க, நமது மந்திரிமார்கள் கருப்புக்கொடி காட்டுதலை சகிக்காமல் முன்னதாகவே தடுத்து சிறைப்படுத்திவிட்டுத்தான் ஊர்களில் பிரவேசிப்பதென்ற முறையில் நடந்துவருவார்களானால் அதாவது சமீபத்தில் பிரதமர் ரெட்டியார் அவர்கள் நாகர்கோவிலில் நடந்துகொண்டது போலவும், திண்டுக்கல்லில் ஸ்தல ஸ்தாபன மந்திரி தோழர் சந்திரமௌளி அவர்கள் நடந்துகொண்டது போலவும், இவர்களையெல்லாம்விட நமது மதிப்பிற்குரிய கவர்னர்-ஜெனரல் அவர்கள் அவரது ஆப்த நண்பரான நமது பெரியார் அவர்களையும், நம் தளபதிகளையும், தோழர்களையும் சிறையில் வைத்துவிட்ட பின்னர் சென்னை நகரில் பவனிவந்ததைப் போலவுமே இனியும் நமது மந்திரிமார்கள் நடப்பார்களானால் அவைகளை நல்லதோரு வாய்ப்பாகவேகருதி ஏராளமான பேர்கள் கருப்புக் கொடி காட்ட முன்வர வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

கடைசியாக நமது தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள். நமது தலைவர் பெரியார், தளபதி, மற்றும் பல முக்கியத் தோழர்கள் அனைவரையும் சர்க்கார் கைது செய்துவிட்டார்கள். இந்தச் சமயத்தில் வெளியிலுள்ள நமக்குப் பொறுப்பு அதிகம். தலைவர்கள் வெளியில் இருந்த காலத்தில் நடந்து கொண்டதைவிடப் பல மடங்கு நாம் பொறுமையாகவும், அடக்கமாகவும், போலீசாருக்கு அவர்களது கடமைகளைச் செய்வதில் எவ்வித இடையூறு இல்லாத வகையிலும் நடந்து காண்பிப்பதன் மூலம் சர்க்கார் வெட்கித்துப்போய் தலைவர்களைக் கைது செய்து விடுவதால் பயன் ஒன்றும் இல்லை என்று உணர்ந்து கைது செய்தவர்களையெல்லாம் விடுதலை செய்துவிட வேண்டிய நிலைமையை உண்டாக்க வேண்டும். ஆகவே, தோழர்களே! நம் தலைவர்களின் விடுதலை நம் கையில் இருக்கிறது; நம் செயலில் இருக்கிறது என்பதை உணருங்கள்! ஆவன அயராது செய்யுங்கள்!! என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

●

இதுவா

மக்கள் சர்க்கார்!

(*○*)

இன்று இந்நாட்டில் நடைபெறும் சர்க்கார் மக்கள் சர்க்கார் என்று சொல்லப்படுகிறது. அதாவது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நடத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையில், இன்றைய சர்க்காரின் போக்கைப் பார்ப்பவர்கள் எவரும் அத்தகைய சர்க்கார் என்று சொல்லத்துணிவு கொள்ளார். ஏனெனில் மக்கள் சர்க்கார் எனில் மக்களின் விருப்பத்திற்கு மாறாக நடக்கத்துணிவு கொள்வார்களா?

மக்கள் சர்க்கார் எனில் பெரும்பாலான மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகளால் நடத்தப்படும் சர்க்கார் என்பதாகும். ஆனால் இங்கு அவ்வாறு தெரிந்தெடுக்கப்படவில்லை. ஒருசிறுகூட்டத்தார் (காங்கரஸார்) தாங்கள் தான் இந்நாட்டின் ஏகப்பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டுவந்தார்கள். அவர்களால் நியமிக்கப்

பட்டவர்களை அதாவது ஒரு சில மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களால் இன்றைய சர்க்கார் நடைபெற்று வருகிறது. அதுவும் இந்தப் பிரதிநிதிகளுக்கும் சர்க்காரில் எத்தகைய உரிமையும் கிடையாது. எந்த கூட்டத்தார் தங்களை நிறுத்தினார்களோ அவர்கள் விருப்பு வெறுப்புக்கேற்றவாறு நடந்து கொள்பவர்களாயிருக்கின்றனர். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், அந்தக் கூட்டத்தாரின் கட்டளையை நிறைவேற்றி வைக்கும் அவர்களது கையாட்களாக யிருந்து வருகிறார்கள் என்பதாகும். இந்த நிலையில் உள்ள வர்களால் நடத்தப்படும் இன்றைய ஆட்சி மக்கள் ஆட்சி என்றும், மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் ஆட்சி யென்றும் சொல்ல முடியுமா? அவ்வாறு சொல்வதையும் எல்லோரும் நம்பித்தான் ஆகவேண்டும் என்று எவ்வாறு கட்டாயப்படுத்த முடியும் என்பதும் நமக்கு விளங்கவில்லை.

ஏன் இவ்வாறுசொல்லுகிறோம் என்றால், இன்றைய இந்நாட்டு சர்க்கார் எந்த சட்டம் செய்வதாயிருந்தாலும், எந்தவிதமான திட்டம் போடுவதானாலும் அந்த சிறு கூட்டத்தாரின் அனுமதியில்லாமல் அங்கீகாரம் இல்லாமல் செய்வதற்கில்லை. இதைப் பட்டவர்த்தனமாக கடந்த ஒருவருட சர்க்கார் நிகழ்ச்சிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக ஜமீன்தார் ஒழிப்பு மசோதா ஒன்றே போதுமான எடுத்துக்காட்டாகும். எனவே, இன்றைய சர்க்கார் மக்கள் சர்க்கார் என்று சொல்லிக்கொள்வதில் எள்ளளவும் உண்மையில்லை யென்பதோடு அரசியலைப்பற்றி அ. ஆ. கூட தெரியாத மக்களை, யாராண்டால் என்ன? என்ற கவலையற்று இருக்கிற மக்களை ஏய்ப்பதாகும். இத்தகைய பித்தலாட்டமான காரியங்களை உண்மையான ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள எவரும் வெளிப்படுத்தாமல் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

அன்று அரசன், தன்னிஷ்டம் போல் ஆளும் போதும் மக்களின் நலனுக்காகவே ஆளுவதாகவும் எந்தக்காரியம் செய்யும் போதும் மக்களுக்காகவே செய்வதாகவும் சொல்லி வந்தான். அதுபோல வேதான் இன்றும் இந்த சர்க்காரும் மக்கள் சர்க்கார் என்றும் மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் சர்க்கார் என்றும் சொல்லி வருகிறார்கள். ஆனால் இன்றைய சர்க்காரின் போக்குகளைப் பார்த்தால் இதை மக்கள் சர்க்கார் என்பதற்கும் பதிலாக மாக்கள் சர்க்கார் என்று சொல்லுவதுதான் பொருந்தும் என்று எண்ணாமலிருக்க முடியாது.

ஏனெனில், மக்கள் ஆட்சியாயிருந்தால்—ஜனநாயக ஆட்சியாயிருந்தால், எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்புக் கொடுத்து—வாதங்களுக்குச் செவி சாய்த்து—மதித்து நடந்து கொள்வார்கள் ஆட்சியாளர்கள். இதைத்தான் ஜனநாயக நாடுகளில் நாம் காணும் காட்சியாகும். இன்று இந்நாட்டில் திராவிடர் கழகம்—திராவிடர்களின் நலனைக்காக்க—அவர்களின் நல்வாழ்வுக்காக—அவர்களின் சமூகம் உயர்வடையப் பாடுபட்டுவரும் ஒரு கட்சியாகும். இவ்வுண்மை இந்நாட்டிலுமட்டுமல்ல எல்லா நாடுகளுக்கும் தெரியும். இவர்கள், இன்றைய அரசியலார் செய்யும் சில காரியங்கள்—தங்கள் மக்களின்—திராவிட மக்களின் வாழ்வுக்குத் தீமை விளைவிக்கும் என்பதாகக் கருதி சர்க்காருக்கு எந்தெந்த வகைகளில் தெரிவிக்க வேண்டுமோ அந்தந்த வகைகளில் தெரிவித்தார்கள் சர்க்கார் திருந்துவதாகத் தெரியவில்லை. அதனால் சர்க்காரின் செய்கையினால் அதாவது இந்தி மொழியைக் கட்டாயமாக நமது சிறுவர்கள் மீது புகுத்துவதால் வரும் கேடுகளைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்காக—எடுத்துக்காட்டுவதற்காக மறியல் மூலமாகவும் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், மகாநாடுகள், மந்திரிகளுக்கு கருப்புக்கொடி பிடித்தல் முதலியவைகள் மூலமாக செய்வதென முடிவு செய்தது திராவிடர் கழகம். அதுவும் அறப்போர் மூலமாக அமைதியான முறையில் எந்த உயிருக்கும் மனத்தினாலும் தீங்கு நினைக்காத முறையில் நடத்துவதெனப் பெரியார் அவர்கள் திட்டம் போட்டுத்தர, தளபதி அண்ணா போரை நடத்தி வருகையில், இந்த சர்க்கார் திடீரென புது முஸ்தீப்பிலிறங்கிவிட்டிருக்கின்றனர்.

பல ஊர்களில் திராவிடர் கழகத்தார் நடத்தும் ஊர்வலங்களுக்கும் மகாநாடுகளுக்கும் தடை விதித்து வருகின்றனர். கருப்புச் சட்டைப் போட்டவர்களையே சில இடங்களில் பிடித்து அடைத்து வைத்திருக்கின்றனர். சென்னை உட்பட பல ஊர்களில் கருப்புக்கொடி பிடித்த நமது கழகத்தொண்டர்கள் மீது கி. பி. கோ. 151 வது செக்ஷன் கீழ் வழக்குத் தொடுத்து அபராதமும் அபராதம் கட்டத்தவறினால் சிறை தண்டனையும் விதித்து வருகின்றனர். இதே பிரிவின்கீழ் தான், சென்னயில் 11 நாட்களாக அமைதியான முறையில் இந்தி எதிர்ப்பு மறியல் செய்து வந்த தொண்டர்கள், தாய்மார்கள் உட்பட 14 பேர்களையும் 26-ந்தேதி கைது செய்து அன்று மாலையே நகருக்கு 30 மைல் தூரத்தில் லாரியில் கொண்டுபோய் இறக்கி விட்டு வந்திருக்கிறார்கள்.

ஒரு அரசியல் கட்சி, ஆட்சியாளரின் செய்கையைக் கண்டித்து மக்களுக்கு நியாயமான முறையில் அமைதியான முறையில் எடுத்து விளக்கி வருவதை தடுப்பதும், அக்காரியம் பொது மக்களின் அமைதியைக் கெடுப்பதாகும் என்று சொல்லி—கலவரம் விளைவிப்பவர்கள் என்று சொல்லி-151வது பிரிவின் கீழ் வழக்குத் தொடர்வதும் தண்டிப்பதும் ஜனநாயக முறையா? ஒரு அரசியல் கட்சிக்குக் காட்டும் மரியாதையா? அதுவும் கர்ப்பினிகளையும் பச்சிளங் குழந்தைகளையும் கலகம் செய்பவர்கள் என்று குற்றம் சாட்டிக் கைது செய்வது நேர்மையா? பெண் என்றால் பேயும் இரங்கும் என்கிறார்களே! இந்த சர்க்கார் மக்கள் சர்க்காராயிருந்தால் இவர்களுக்கு இரக்கமிருக்குமா அல்லவா? இரக்கமிருந்திருந்தால் இவ்வாறு கர்ப்பினிகளையும் தாய்மார்களையும் 30 மைல்களுக்கப்பால் கொண்டுபோய் விட்டு வருவார்களா? எனவே, இத்தகைய ஆட்சியை மாக்களாட்சியென்று சொல்வதுதான் பொருந்தும் — நியாயமுமாகும். இத்தகைய அடக்கு முறைகளால் மக்களின் எதிர்ப்பை அடக்கிவிட முடியாது. இதை இன்றைய ஆளவந்தார்கள் நன்கு அறிவர். எனவே, நேர்மையான முறையில் நடந்து கொள்வார்களாக. மிருக ஆட்சி நிலைக்காது! நிலைக்காது!! என்று எச்சரிக்கிறோம்.

சென்னை நகரில் பரபரப்பு.

ஆச்சாரியாருக்கு கறுப்புக்கொடி வரவேற்பு!

சென்னைக்கு 23ந்தேதி வந்த போது கவர்னர் ஜெனரல் தோழர் சி. ராஜகோபாலாச்சாரிக்கு நகரெங்கும் கறுப்புக்கொடி வரவேற்பளிக்கப்பட்டது.

அன்று மாலை ஸ்டேடியத்தில் நடந்த பொதுக்கூட்டத்திற்கு போலீஸ் கடுபிடி பிரமாதமாகயிருந்தும், கறுப்புக்கொடி வரவேற்புக்குக் குறைவில்லை. இது சம்பந்தமாக 57-தோழர்களை கைது செய்து மறுநாள் காலை கி. பி. கோ. 75-வது பிரிவின்கீழ் குற்றம் சாட்டி ரூ. 5 அபராதமும் கட்டத் தவறினால் ஒரு வாரம் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. தோழர்கள் அபராதம் செலுத்தவில்லை; தண்டனை அனுபவிக்கின்றனர்.

[:●:]

குடி அரசு உதவி ஆசிரியர் மானேஜர் கைது

குடி அரசு உதவி ஆசிரியர் புலவர் நா. மு. மாணிக்கம் அவர்களும், மானேஜர் தோழர் எம். கே. குகநாதன் அவர்களும் 22—8—48ந் தேதி சென்னையில் நடைபெற்ற கமிட்டிக்கூட்டத்திற்குச் சென்றிருந்தார்கள். மற்றவர்களுடன் இவ்விருவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

●

மதுரையில் தடை

இம்மாத இறுதியில் மதுரையில் நடக்கவிருந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்கு இப்பொழுது தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஹிந்தி எதிர்ப்பு மாநாடு நடத்துவதானால் பொதுமக்கள் பெருவாரியான முறையில் ஹிந்தி எதிர்ப்பை நடத்துவதற்குத் தூண்டுவதாகுமென்றும், நடத்தப்படும் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் சமாதானத்தைக் குலைக்குமென்றும் தாம் கருதுவதால் தடையுத்தரவை விதிப்பதாக மதுரை ஜில்லா மாஜிஸ்திரேட் தமது தடையுத்தரவில் குறிப்பிட்டுள்ளாராம்.

★

பெரியார் அவர்களும் மற்றுமுள்ள தலைவர்களும் தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள். செய்தி காட்டுத் தீப்போல் நகரமெங்கும் உடனே பரவிவிட்டது. அன்று (22—8—48) மாலை சென்னை ஜிம்கானா மைதானத்தில் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் தலைமையில் கூடவிருந்த கூட்டத்திற்கு லட்சத்திற்கு மேல் மக்கள் பரபரப்புடன் திரண்டு கூடிவிட்டனர். தோழர்கள் என். ஜீவரத்தினம், க. அன்பழகன், குஞ்சிதம் குருசாமி ஆகியோர் பேசுவதற்கு வந்திருந்தனர். ஆனால் ஷை கூட்டத்தை நடத்தக் கூடாதென போலீசார் தடுத்துவிட்டனர். அதனால் ஒலிபெருக்கி வைக்கவோ, விளக்குகள் போடவோ முடியாமல் போய்விட்டது.

அப்படியிருந்தும் மக்களின் மனோநிலையை யுணர்ந்த தமிழ்ப் பெரியார், சுமார் 1½-மணிநேரம் பேசி, மக்களை அமைதியாகக் கலைந்து போகுமாறு வேண்டிக் கொண்டார். சென்னை சர்க்காரின் கண்மூடித்தனமான அடக்கு முறையை வன்மையாகக் கண்டித்தார்.

இக் கூட்டத்தினர் மீது அங்கு ஊர்வலமாக வந்த சென்னை காங்கரஸ் தொழிற்சங்கம் என்ற பெயரால் காங்கரஸ்காரர்கள் கற்களை வீசி கலவரம் விளைவித்தனர். இங்கு மட்டுமல்ல, பல ஊர்களிலும் ஒரு கூட்டம் காங்கரஸ்காரர்களை திராவிடர் கழகத்தின் மீது ஏவிவிடுகிறது. ஆனால், உண்மை காங்கரஸ் திராவிடத் தோழர்கள் இவ்வலையில் சிக்குவதில்லை.

★

நாடெங்கும் கண்டனம்

பெரியார் அவர்களையும், தளபதி அண்ணா அவர்களையும் மற்றுமுள்ள தோழர்களையும் சென்னை சர்க்கார் கைது செய்ததைக் கண்டித்து நாடெங்கும் கண்டனக் கூட்டங்களும் கதவடைப்புகளும் நடந்தவண்ணமிருந்து வருகின்றன.

மாணவர்கள் கொதிப்பு

சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், சேலம் கல்லூரியிலும், மாணவர்கள் ஹர்த்தால் செய்தனர். இதுபோல் பல ஊர் கல்லூரிகளிலும் உயர்தரப் பள்ளிகளிலும், ஹர்த்தால் செய்திருக்கின்றனர்.

பொதுக் கூட்டத்துக்குத் தடை

தூத்துக்குடியில் 23-தேதி கண்டனக் கூட்டம் போடுவதற்கு போலீசார் அனுமதியளிக்கவில்லை. நகரில் 144-போடப்பட்டுவிட்டது. இந்தி எதிர்ப்பைப் பற்றியும், இந்தி எதிர்ப்புப் பற்றி சகல கட்சித் தலைவர்களின் அபிப்பிராயங்களைப் பற்றியும் எழுதி வைத்திருந்த 8-போர்டுகளையும் போலீசார் தூக்கிச் சென்றுவிட்டனர்.

திண்டுக்கல்லில் 9-தோழர்கள் கைது

23—8—48-தேதி திண்டுக்கல்லில் தோழர் காமராஜ் தலைமையில் நடைபெற்ற 11-வது திண்டுக்கல் அரசியல் மாநாட்டைத்திறந்து வைக்க வந்திருந்த ஸ்தலஸ்தாபன மந்திரி தோழர் சந்திரமௌளியின் முன் தங்களது இந்தி எதிர்ப்பை காட்டிய தோழர்களில் 9-பேர்களை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

நாகர்கோவிலில் தர்பார்

நாகர்கோவிலில் மதுவிலக்கு விழாவை துவக்குவதற்காக சென்னை முதலமைச்சர் தோழர் ஓமாந்தூரார் வந்திருந்தபோது தங்கள் இந்தி எதிர்ப்பைக் காட்டும்முறையில் ஊர்வலமாக வந்துகொண்டிருந்த கருஞ்சட்டையணிந்திருந்த திராவிடர் தோழர்களை போலீசார் கைதுசெய்து, பிரதமர் நாகர்கோவிலைவிட்டுத் திரும்பியதும் விடுதலை செய்துவிட்டனர்.

-(●)-

சென்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இரண்டு பேர் ஜெயிலில் இறந்தார்கள் என்றால், இன்றையப் போராட்டத்தில் 200 பேருக்கு மேலாக வெளியிலேயே இறக்க நேரிடக்கூடும். பெரியார்.

அபார யோசனை!

—()●()—

ஆஸ்திரேலியாவிலுள்ள கிளெர்மாண்ட் என்னுமிடத்தில் ஏராளமான சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. எல்லாக்கொட்டகைகளிலும் மாலை நேரத்தில் தொடங்கப்பெறும் சினிமாக்காட்சிகள் இரவு முழுதும் இடைவிடாது நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. அவ்வூர் மக்களிற் பெரும்பாலோர் தங்கச் சுரங்கங்களில் பகல் முழுதும் வேலை செய்கின்றனர். ஆகையால் பகற்பொழுதில் சினிமாக் காட்சி கிடையாது.

அவ்வூரில் வீட்டு நெருக்கடி மிக அதிகமாக உள்ள காரணத்தினால் இரவு நேரங்களில் உறங்க இடமில்லாத அநேகர் சினிமா டிக்கட்டுகள் பெற்று சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறே உறங்கிவிட்டுக் காலையில் எழுந்து வேலைக்குச் செல்கின்றனர்.

சினிமாக் கொட்டகைகள் ஏற்பட்ட காலம் முதல் எவ்வளவு மோசமான படம் நடந்தாலும் உள்ளே ஒரு காலியிடங்கூட இருந்ததில்லை. மேலும் டிக்கட்டுகள் பெரும்பாலும் அதிகமான கள்ளமார்க்கட் விலைக்கே விற்கப்படுகின்றன. பலர் தொடர்ச்சியான சீசன் டிக்கட்டுகள் வாங்கி வைத்துக்கொண்டுள்ளனர்.

சினிமாத் திரை மேல் தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பின்புறம் நன்கு சாய்ந்துகொண்டே பார்க்கும் முறையில் ஆசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் தூங்குவது மிக எளிதாய் முடிகிறது.

எப்பொழுதும் இம்மாதிரியான சினிமா டிக்கட் வாங்குவதற்கு அதிகமான மக்கள் காத்துக்கொண்டே யிருக்கிறார்கள். எல்லா வகுப்புகளுக்கும் ஒரே கட்டணந்தான்.

இரவு முழுதும் படம் தொடர்ந்து நடந்து காலையில் முடிந்தவுடன் உணவுவிடுதியைச் சேர்ந்த பெண்கள் கையில் உணவுடன் தூங்குவோரையெல்லாம் எழுப்பி உணவுகொள்ளச் செய்ததும் யாவரும் தத்தம் வேலைகளுக்குச் செல்கின்றனர்.

வீட்டு நெருக்கடியைச் சாமாளிக்கக் கண்டு பிடிக்கப்பட்ட யோசனை எப்படி? "தேவையே கண்டுபிடிப்புக்குத் தாய்!"

ஆச்சாரியர் தவிப்பு—அம்மையார் மறுப்பு.

நமது கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் ஒரு நாள் அய்க்கிய மாகாண கவர்னரான சரோஜினி தேவிக்குத் தமது வைசிராய் மாளிகையின் எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்து வந்தாராம். படுக்கையறைக்கு வந்ததும் அங்கிருந்த ஒரு பெரிய கட்டிலைச் சுட்டிக்காட்டி "இதைப் பாருங்கள்! இவ்வளவு சிறிய மனிதனான நான் படுத்துறங்க எவ்வளவு பெரிய படுக்கையை அளித்திருக்கிறார்கள்'' என்றாராம். உடனே அம்மையார் "ராஜாஜி! நான் அநேக சமயங்களில் உங்களுக்கு உதவியாயிருந்திருக்கிறேன். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் என்னால் உதவி செய்ய முடியவில்லையே என அஞ்சுகிறேன்'' என்று பதிலளித்தாராம்.

★

இதன் ரகசியம் என்ன?

கவர்னர்—ஜெனரல் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 23, 24, 25 தேதிகளில் சென்னை நகரில் தங்கியிருந்து பகல் நேரங்களில் அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளையும், மற்ற அலுவல்களையும் நாம் பத்திரிக்கைகளின் மூலம் படித்திருக்கிறோம்.

ஆனால் அன்பர் ஆச்சாரியார் ரேடியோ மூலமாகத் தமிழ் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் "நான் இந்தத் தென்னாட்டில் மூன்று இரவு கழித்தேன். இதனால் எனக்கு உண்டான மகிழ்ச்சிக்காக நன்றி செலுத்துகிறேன்'' என்று கூறியிருக்கிறாரே, யாருக்கு நன்றி? மூன்று இரவு நிகழ்ச்சிகள் எங்கே? எந்தப்பத்திரிக்கையிலும் காணோமே! அப்படியென்னப்பா சங்கதி! அதெல்லாம் தேவ ரகசியம் போலும்!

—( )—

வாழ்க்கை ஒப்பந்தம்

நாகை திராவிடர் கழகத் தலைவர் தோழர் ஆர். ப. கோபால் அவர்களின் தம்பி தோழர் இரா. தீனதயாளனுக்கும் கலசபாக்கம் தோழர் சுந்திரராஜலு நாயுடு மகள் தோழியர் லலிதாதேவிக்கும், 18-8-48 தேதி பகல் 10 மணிக்கு நாகை பேபிடாக்கிசில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அது சமயம் மணமக்களை வாழ்த்தியும் சீர்திருத்தமணம் என்பது பற்றியும், மூடத்திருமணத்தினால் விளையும் கேடுகளைக் குறித்தும் மனமாற்ற மடையவேண்டியதின் அவசியம் பற்றியும் தோழர்கள் கே. விஜயராகவலு, நோயல், அறிவழகன், என். பி. காளியப்பன், கெ. வி. அழகிரிசாமி ஆகியவர்கள் பேசினார்கள். தலைவர், மூட நம்பிக்கை ஒழிக்கப்படவேண்டியதை வற்புறுத்தி மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் பேசினார். மணமக்களுக்குப் பல வாழ்த்துப் பத்திரங்களும் ஏராளமான பரிசுகளும் வழங்கப்பட்டன. உள்ளூர் வெளியூர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்திருந்தனர். தோழர் ஆர். வி. கோபால் அவர்கள் நன்றிகூற திருமணம் இனிது முடிந்தது.

நமது குழந்தைகளுக்கு 1வது வகுப்பு, 2-வது வகுப்பு படிக்கக்கூட பள்ளியில் இடமில்லையென்று நகர்ப்புறங்களில் கூறப்படுகிறது. அதாவது போதிய பள்ளிக்கூடங்களில்லை. வாத்தியார்கள் இல்லை. என்றாலும் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு இந்தி வகுப்பும் இந்தி வாத்தியாரும் வைத்துக் கொள்ளவேண்டுமாம். யார் அப்பன் வீட்டுப்பணம் கொள்ளை போவது இதற்கெல்லாம்?

பெரியார்.

கருப்புச்சட்டை, கதர்ச்சட்டை, காவிச்சட்டை, கால்சட்டை—எச்சட்டை போட்டிருந்தாலும் தமிழன் என்ற உடல் சட்டையோடு பிறந்துள்ள தமிழர்கள் அத்தனைபேரும் தமிழைக்காக்கக் கடமைப்பட்டவர்கள் தான்.

ம. போ. சி.

சென்றபோராட்டத்தின்போது ஆண்கள் படை ஒன்று ஊர் ஊராகச் சுற்றிவந்தது. இம்முறை பெண்கள் படையும் ஒன்று புறப்படட்டும். அடிப்பதும் சுடுவதும் எல்லாம் ஆண்களிடத்தில் தான் பலிக்கும். நம்மிடம் சர்க்கார் அவ்வளவு படுமோசத்திற்கு இறங்கமாட்டார்கள். இறங்கினால் தான் என்ன. நாமும் ஒரு கை பார்ப்போம். நம்மை ஒருக்காலும் சர்க்காரால் அடக்க முடியாது. அது நிச்சயம். நிச்சயம் வெற்றி பெறுவோம்.

இராமமிர்தம்.

1937—1948 உரையாடல்.

★

இடம்: வயல்புரம்.
காலம்: மாலை.
பாத்திரங்கள்: கழனியில் வேலை செய்யும் காத்தானும் காங்கரஸ் தொண்டர் கன்னியப்பனும்.

கன்:- யாரப்பா அங்கே வேலை செய்வது?

காத்:- என்னாங்க நான்தானுங்க.

கன்:- வாங்க நமஸ்காரம்.

காத்:- அய்யய்யோ நீங்க என்னங்க என்னக் கும்பிடரீங்க,

கன்:- பரவாயில்லை அப்பனே நாமெல்லாம் இன்னாட்டு மக்கள் அல்லவா? ஒற்றுமையும் சகோதரத்துவமும் நிறைந்தவர்கள் அல்லவா நாம் கிராம மக்களாகிய நீங்கள் தானே அப்பா இந்த 'பாரத நாட்டின் பொக்கிஷம்' உங்களுக்கு 'நமஸ்காரம்' பண்ணுவது நமது அன்னை, பாரத தேவிக்கு அஞ்சலி செய்வது போலத்தானே அப்பனே!

காத்:- அதெல்லாம் எனக்கென்னங்க தெரியும், ஏங்க இளநீர் போட்டுத்தார சாப்பிடரீங்களா?

கன்:- வாண்டாம் அப்பனே, எனக்கு தேசத் தொண்டில் ஈடுபட்ட எனக்குப் பசி, தாகம் ஏதப்பா? இந்த நாட்டில் வெள்ளைக்காரன் இருக்கும் வரைக்கும் என் போன்றவர்கள் அவைகளையெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாமா?

காத்:- அதைப்பத்தியெல்லாம் எனக்கென்னங்க தெரியும்.

கன்:- அது சரி அப்பனே. இப்பொழுது உனக்கு நாள் ஒன்றுக்கு கூலி என்ன கிடைக்கும்?

காத்: என்னத்தை வருதுங்க நாள் ஒன்றுக்கு ஒண்ணேகால் ரூபாதானுங்க!

கன்:- இந்த ஒண்ணேகால் ரூபா உன் குடும்பத்துக்குப் போதுமா அப்பா.

காத்:- என்னங்க எங்க வீட்டுலே நானும் எம் பொஞ்சாதியும் இரண்டு குழந்தையும் தானுங்களே—தினம் இரண்டு படி அரிசி இருந்தாப் போதுங்க, அதுக்கு மூணணா போக மேஞ்செலவு நாலணா ஆவுமுங்க! மீதமாக ஏதோ கொஞ்சம் சேத்து வைப்பமுங்க அதுதான் வேட்டி துணிமணி மூய் மொறை போக்கு வருத்து இதுக்கெல்லா கொஞ்சம் பத்தியும் பத்தாமத்தான் இருக்குதுங்க.

கன்:- அதுதான் பார்த்தாயா இந்த சண்டாள வெள்ளைக்காரனுங்க நம்ப நாட்டை விட்டுட்டுப் போயிட்டா! நம்ம காங்கரஸ் இந்த நாட்டை ஆண்டாக்க இந்த மாதிரி கஷ்டமெல்லா இருக்காது. அரிசி பருப்பு சாமான் துணிமணி எல்லாம் தாராளமாகக்கிடைக்கும். வேலையும் கூலியும் தாராளம்— உன் போன்றவர்கள் கஷ்டப்படவே வேண்டியதில்லை. அதனாலே தான் நீயெல்லாம் காங்கரசுக்கு ஓட்டுப் போடோணும். காங்கரசுலே சேரோணும் நம்ம காந்தி மாகான் சொல்லரதைக் கேக்கோணும்.

காத்:- அதுக்கென்னங்க நீங்க சொன்னாச் செரிதானுங்க எப்படியோ கஷ்டமில்லாமே சீவனம் நடந்தா செரிதானுங்க.

கன்:- ஆமா காத்தான் இதைமனசிலே வச்சுக்கோ ஆண்டவன் அருள் உனக்குக் கிடைக்கும். நான் வரட்டுமா—ஜெய்வந்தேமாதரம்—சொல்லு.

காத்:- வந்தே மாதரமுங்க!

(2)

இடம்: வயல்புரம்.
காலம்: மாலை 4 மணி.
பாத்திரங்கள்:- காத்தானும். காங்கரஸ் தொண்டர் கன்னியப்பனும்.

(முளங்கால் சேற்றில் ஒட்டி உலர்ந்த உடலத்தோடு கிழிந்த முண்டாசும் கிழிந்த கந்தல் ஆடையுமாக தாடி மீசை நரைத்த உருவம் தன் வியர்வையை வழித்து எறிந்த வண்ணம்—மண் வெட்டியை தூக்கி—வெட்டக்கூட சக்தியின்றி வேலை செய்து கொண்டிருக்கிறது.)

கன்னியப்பன்:- யாரப்பா அங்கே வேலை செய்வது?

காத்தான்:- ஏய்யா.

கன்:- நீ இந்த ஊர்தானா?

காத்:- பின்ன—எந்த ஊருக்குப் போகச் சொல்றீங்க?

கன்:- இல்லப்பா. இந்த ஊராண்ணு கேட்டேன்.

காத்:- ஆமாய்யா ஆமா இதே ஊருதா விசயத்தைச் சொல்லுங்க.

கன்:- இங்கே ஏதோ தரிசுநிலம் புறம்போக்கு இருக்குதாமே உனக்குத் தெரியுமா?

காத்:- எனத்துக்குங்க சுடுகாட்டுக்கா?

கன்:- ஏய் நீ என்ன அதிகப்பிரசங்கித்தனமா பேசரே.

காத்:- அடத்தெரியுமய்யா உன்னை இந்தப் பத்துப்பனிரண்டு வருசத்துக்கு முன்னே நீதானே இதே இடத்திலே வந்து காங்கரசுக்கு ஓட்டுப் போட்டா கூலியும் வேலையும் தாராளமாகக் கிடைக்கும், கஷ்டமே இருக்காதுண்ணு சொன்ன ஆளு.

கன்:- ஆமா நான்தான். ஏன் உனக்கென்ன இப்பக் கஷ்டமா இருக்குதா?

காத்:- அட சும்மா போய்யா என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்காதே. மகா மனுசனாட்டம் வந்துட்டான். தரிசு நிலம் இருக்குதாண்ணு தரிசு நிலத்தைக் கொடுத்தா உடனே கொத்தும் கோடாலியும் எடுத்து வெட்டி அப்படியே நிலத்தை நஞ்சை ஆக்கிப்பிடரவனாட்டம் பேச வந்துட்டான் வெக்கமில்லாமே. காங்கரசுக்கு ஓட்டுப் போடுண்ணையே பாத்தியா இப்ப எங்குடும்பம் தவியா தவிக்கிரதை.

கன்:- ஏப்பா இப்பத்தான் உனக்கெல்லாம் கூலி இரண்டரை ரூபாய் கொடுக்கிராங்களே என்ன கஷ்டம்?

காத்:- கண்டுக்கிட்டாண்டா இரண்டரை ரூபாயே! ரூபாயிக்கு ஒரு படி அரிசி விக்குது. முந்தி என்ன விலை தெரியுமா ஒரு படி அரிசி ஒண்ணே காலணா, ஒரு ஜோடி வேட்டி முக்கால் ரூபாய்க்கு வித்தது இப்பக்கேட்டா எட்டு ரூபா சொல்லரான் சேலை பனிரண்டு முளம் பதினைந்தணாவுக்கு வித்தது இப்பக்கேட்டா பனிரண்டு ரூபா சொல்லரான் இந்த மாதிரி விலை போட்டு வாங்கி குடும்பம் நடத்திப் பாத்தாதானே தெரியும். உனக்கென்ன! வெத்தாளா இருப்பே! உலகந்தெரியாமே. பேசரே! தரிசு நிலம் வேணுமா உழுது பாடுபடரவனாட்டம் விசாரிக்கவந்துட்டாண்டா திருட்டுப் பய. ஏ முன்னாலே நிக்காதே—சும்மாபோயிடு.

கன்:- ஏய் என்னை யாருண்ணு நினைச்சே. போலீசைக்கொண்டு வந்து உதைக்கச் சொல்லுவேன் தெரியுமா?

காத்:- அடத்தெரியுமய்யா. போலீசுதா உங்க ஆளாச்சு செய்யு—போ! ஓதைச்சு ஜெயிலுக்கு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

போதிக்கும் மதத்தையே நம்பி யிருக்கின்றனர் ஒரு சில, மதம் பிடித்த அறிவிலிகள். கடவுளால் நீதியான, நேர்மையான முறையி லே ஏற்படுத்தப்பட்டதுதான் மதம், இது விதிப்பயன் என எந்தப் பேடியாவது எண்ணுவானே யாகில் அந்தக் கடவுளையும் அவனது கயவாளித்தனத்தையும், விதிப்பயன் என்று கூறும் வேதாந்திகளான வீணர்களையும் ஒழித்துவிடவேண்டும், மதம் என்ற சொல் மறைய.

போலித்தனத்தையும், புளுகுப் பித்தலாட்டங்களையும், குள்ள நரிச் செயல் செய்யும் குணம் படைத்தோரின் குணங்களையும் என்போன்ற சிந்தனையாளர்கள்--பகுத்தறிவாளர்கள் கண்டிக்கும் போது சுயநலக்கும்பல்களும், அவர்களது மாய்கையிலே மயங்கிக்கிடக்கும் ஆரிய அடிவருடிகளும், பிற்போக்கினரும் சிறலாம் —என்னை நாஸ்தீகன் என்றுகூறி சபிக்கலாம். இது அர்த்தமற்றது மட்டுமல்ல; முழு மூடத்தனமும் கூட.

என்னை வீணன் என்று ஆஸ்தீகர்கள் கூறலாம்! அவ்வளவு தானே? கவலையில்லை! அய்யா, யோக்கியசிகாமணிகளே நீங்கள் உங்கள் சிந்தனைக்குக் கொஞ்சம் வேலை கொடுங்கள் அதுபோதும். ஆனால்.........! நெற்றிக் கண்ணனையும் நேமிகொண்டவனையும் அழைத்து என்னை அழித்துவிட ஏவிவிடாதீர்கள்! இது அணுகுண்டு சகாப்தம் என்பது நினைவிலிருக்கட்டும்!

கண்மூடித்தனமாகக் குறைகூறுபவர்கள், அறிவிருந்தும் அதனைப் பயன்படுத்தாது 'லூஸ்' தனமான செயல்கள் புரிவோர், ஏமாற்று வித்தைகளில் உழன்று கிடக்கிற சாதாரணமான பாமரமக்கள் முதலிய அனைவரும் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் காலநிலைமாறி மதம் மண்மூடிப்போகும்--ஒழிந்துவிடும்.

'மதம் ஓர் அழுகிய பிணம்; அதனை உடனே அப்புறப்படுத்தாவிடில் அதனுடைய துர்நாற்றம் மக்களுக்குப் பெருங் கேட்டினை விளைவிக்கும்' என்று காண்டேகர் கூறியபடி. மதத்தை நம் நாட்டிலிருந்து ஒழிக்கப் பாடுபடவேண்டும். இல்லாவிடில் நம் நாட்டு மக்கள் முன்னேறவழியின்றி மாய்கையிலேயே உழன்று வருந்திக் கிடக்க வேண்டியதுதான். மாசுபடிந்த இத்தகைய மதம் நமக்குத் தேவையில்லை—எனவே ஒழியட்டும்! அதனுடைய வாடை கூட நமக்கு வேண்டாம். நம் இனத்திற்கும் ஒவ்வாது. ஆகையால் மதத்தை ஒழித்து நாட்டிற்கு ஆவனசெய்யவேண்டும். அதற்கு நாடு பல சீர்திருத்தவாதிகளை எதிர்பார்க்கிறது.

ஆகவே இன்று நாட்டிற்கு, மனிதகுலச் சிறுமைகளைக்கண்டு மனம் புழுங்குவோர், அடிமைத் தனத்தை, அறியாமை அந்தகாரத்தை, மதத்தை, மடத்தனத்தை, புல்லுருவிகளை, கருங்காலிகளை, கடவுள் பெயரால் ஏய்த்து வாழும் சுரண்டும் சுயநலக்கும்பலை அனலக்கும் கண்களால் நோக்குவோர், இக்குறைகளை நிவிர்த்திக்க—சீர்திருத்த முன்வருவோர் மிகப்பலர் உடனடியாகத் தேவை.

புதியதோர் உலகுசெய்யவேண்டுமானால், கெட்ட போரிடும் உலகை வேருடன் சாய்க்கவேண்டுமானால் மக்களை அறிவற்றவர்களாக்கும் மூடத்தனங்கள் நிறைந்த மதங்கள் ஒழிக்கப்படவேண்டும்.

எனவேதான் உரத்த குரலில் உரைக்கின்றோம், மனிதராக வாழவிடாத அனைத்தும் அழியட்டும், அறிவுச்சுடர் திக்கெட்டும் பரவட்டும், மதமென்ற விஷநோய் ஒழியட்டும் என்று!

"தன மனோகரன்"

[3ம் பக்கத் தொடர்ச்சி]

காதல் விளையாட்டில் கைதேர்ந்தவளாக விருந்தால் உதிர்த்திடுவாள் ஒருபுன்சிரிப்பை உவகையுடன். மீண்டும் அடுத்தநாள் ஆரம்பமாகிவிடும். அவளும் காதல் கடிதம் எழுதத்துவக்கி விடுவாள். அதில் பிரபல நடிகையும்-நடிகரும் நடிப்பார்கள். காதல் கட்டமாக விருந்தால் காதில்கேட்பதற்கு யோக்கியதையற்ற வசனங்களை பரிமாறிக்கொள்ளுவார்கள். நடிகை மானவெட்கத்தை விட்டு விட்டு அங்க அவயவங்களின் துடிப்புணர்ச்சிகளை அப்படியே பிரதி பலிக்கும் படியான உடை அணிந்துகொண்டு தோற்றமளிப்பாள். பொதுவாகவே நாடகங்கள் மனிதனின் மிருக உணர்ச்சியைத் தூண்டிவிட்டு மீண்டும் வந்து பார்க்கும்படி செய்து காசு பறிப்பதற்கு ஏற்றவழியாக மாறிவிட்டது. இது போன்ற நாடகங்களும் தான் நாட்டில் நடைபெறுகின்றன. இவற்றைப் பார்த்து வாழ்க்கையில் தவறான வழியில் சென்று கெட்டுப்போன இளைஞர்களும் பெண்களும் எத்தனையோ பலர். இதுபோன்ற நாடகங்களுக்கும் அரசாங்கம் அனுமதியளித்துக் கொண்டு தானிருக்கிறது. எனக்கு மட்டில் சக்தியிருந்தால் "ஏ நாடகக் கலையே நீ ஒழிந்துபோ" என்று சபித்து விடுவேன். நாடகத்தமிழால் நாட்டிற்கு தீங்கைத்தான் உண்டாக்க முடியுமென்றால் அது ஒழிந்து போவது மேலல்லவா?

இரணியன் நாடகம் மேற்கண்ட ரகத்தை சேர்ந்ததல்ல. இரணியன் இருந்ததாகக் கூறப்படுவதையும், அவனை திருமாள் என்பவன் நரசிம்ம அவதார மெடுத்து அழித்தான் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளவும் மாட்டோம். புரட்சிகவிஞரின் கற்பனை தான் அந்த நாடகம். ஒரு வேளை நடந்திருந்தால் இப்படித்தான் நடந்திருக்கும் என்று அந்த நாடகத்தில் படம் பிடித்துக்காட்டியிருக்கிறார் கவிஞர். இரணியன், மகன், கடவுள் தூணிலுமிருப்பார் துரும்பிலுமிருப்பார் என்று கூறக்கேட்டவன் தூணை உதைத்தான், என்றும் தூணின் பின்புறம் புலி தோல் போற்றப்பட்டு முன்னரேநிறுத்தப்பட்டிருந்தவன் கத்தியால் குத்தி இரணியனை கொன்று விட்டான் என்றும், மன்னன் இறந்தவுடன் இளவரசனைக் கொன்று விட்டால் நாம் இந்த நாட்டைப் பட்டம் கட்டிக் கொண்டு ஆளலாம் என்று கூறி இருந்தாள் அணங்கபாலா என்னும் ஆரியப் பெண் சேனாதிபதியிடம். அவளே இளவரசனையும் காதலிப்பதாக நடித்து மன்னனுக்குப்பின் சேனாதிபதி நமக்கு இடஞ்சலாக இருப்பானாகையால் அவனை கொன்று விட்டால் நாம் இந்நாட்டை ஆளலாம் என்றும் கூறியிருந்தாள். இளவரசனும் சேனாதிபதியும் சண்டையிட்டுக்

அனுப்பு—விதி கெட்ட பசங்க. உங்களுக்கு நாடாளவா தெரியும்? இதுதாந்தெரியும்.

என்று சொல்லிக் கொண்டு மீண்டும் கழனியில் இறங்கி வேலை செய்கிறான். கன்னியப்பன் ஜெய் ஹிந் என்று முறைப்போடு சொல்லிக்கொண்டு வேகமாகப் போகிறான்.

திரை விழுகிறது.

"கே. பாலையா"

18—9—48ம் நாள் பௌர்ணமியில்
கைலாஸ் ஹில்ஸ் ஹெர்ப் (ரிஜிஸ்ட்)
ஒரு டோஸ் உட்கொண்டால்
5-வகையான ஆஸ்த்துமாவும்
சுகமாகும்.
ஆங்கிலம் அல்லது இந்தியில் எழுதுக:
BRAHMACHARI G. DAS
Sri Sidh Brahmacharya
Sewa Ashram,
P. C. Chitrakot, U. P.

கொள்ளும் பொழுது இருவரையும் ஒழித்துவிட்டு நாட்டை கைப்பற்ற ஆரியம் திட்டமிட்டிருந்தது. இதைத் தான் கவிஞர் இரணியன் நாடகத்தின் மூலம் அழகாக தீட்டியிருக்கிறார். இதுதான் ஆபாசம் நிறைந்த தென்று கூறி தடைவிதித்திருக்கிறார்கள் ஆள வந்தார்கள். இவர்கள் கூறுவதால் அவருடைய நாடகத்தையாரும் ஆபாசம் நிறைந்ததென்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவருடைய நூல்களை படித்தவர்களுக்குத்தான் தெரியும் அதில் இருக்கும், அழகு நயமும் தெளிவான கருத்து விளக்கமும்.

பாரதிதாசனின் நாடகத்தில் ஆபாசமில்லை, அறிவு விளக்க கருத்துகள் நிறைந்திருப்பதுதான் தடைவிதிக்கப் பட்டதற்குக் காரணம். மக்களின் சிந்தனையைக் கிளறிவிடக் கூடிய புரட்சிக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கும் நாடகம் இரணியன். ஆரியத்தின் சூழ்ச்சிகளையும், தங்கள் மகளிரைப் பிறருக்குக் காதல் செய்யவிட்டேனும் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் ஆரியத்தின் இழிந்த பண்பையும், ஆண்டவன் பெயரால் ஏய்க்கும் பித்தலாட்டங்களையும் அழகாக விளக்கத்துடன் எடுத்துக்காட்டியிருக்கிறார். இது எப்படிப் பார்ப்பனீயத் திற்குப் பிடிக்கும்? தடைவிதிக்க ஏற்பாடு செய்து—தடை விதிக்கும்படி செய்துவிட்டனர். ஆரியத்திற்கு இதுவும் ஒரு வெற்றிதான். ஆனால் வரவிருக்கும் ஆபத்திற்கு முன் அறிவிப்பு. அணையப்போகும்போது விளக்கு ஒளிவிட்டுப் பிரகாசத்துடன் எரிவது போலவும், உயிர்போகும் தருவாயில் கொஞ்சம் தெம்பாகப் பேசுவதையும் போலத்தான்.

இரணியன் தோன்றிய பிறகு எத்தனையோ மந்திரி சபைகள் தோன்றி மறைந்துவிட்டன. கவர்னரின் நேரிடை ஆட்சிக் காலத்தில் கூட இரணியனை அழிக்க முடியவில்லை. சி. ஆரும்—பிரகாசமும் முதல் மந்திரியாகவிருந்த காலத்திலும் இரணியனை அழிக்க ஆரியம் முயற்சிக்கவில்லை. காரணம் நம்மிடம் நேரிடைய வம்புக்கு வர அஞ்சுவதுதான். ஓமந்தூராருக்கு பதவி என்ற எலும்புத்துண்டைப் போட்டு திராவிடர்கள் மீது உசுப்பிவிடுகிறார்கள். அவரும் அவர்களுடைய சொல் கேட்காவிட்டால் பதவியை இழக்க வேண்டியிருக்குமே என்று அஞ்சுகிறார். நாமும் முழு பலத்துடன் எதிர்த்தால் இந்த மந்திரிசபையை நாளையே ஒரு ஆட்டு ஆட்டிவிட முடியும். திராவிட அமைச்சரான ஓமந்தூராருக்கு ஏன் அவ்வளவு துன்பத்தைக் கொடுக்கவேண்டும் என்றே மிகவும் பொறுத்துப் பார்க்கிறோம். திருந்தினால் திருந்தட்டும். இல்லையேல் வருவதை அனுபவிக்கட்டும்.

ஆரியத்தின் சூரண்டல் திட்டத் திற்கு இடையூர்களிலிருக்கும் திராவிடர் கழகத்தினரை ஒழித்துவிட வேண்டுமென்று ஆரியம் தீவிரமாக வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது. இந்தியையெதிர்க்கும் திராவிடர்கழகத்தினரை அடக்கி ஒடுக்கிவிட முடியாவிட்டால் மந்திரி பதவியை விட்டு ராஜிநாமா செய்துவிடும்படி ஒரு ஆரிய ஏடு கல்வி மந்திரி அவினாசியாருக்கு யோசனை கூறுகிறது, அல்ல அறைந்து சொல்வதுமாதிரி இடித்துக்கூறுகிறது. அவினாசியாரும் என்ன செய்வாரோ பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். பிரதமர் ஓமாந்தூராருக்கும் கல்வி மந்திரியார் அவினாசியாருக்கும் நானும் ஒரு யோசனை கூற ஆசைப்படுகிறேன். மந்திரிசபையை விட்டு ராஜிநாமா செய்துவிட்டு வெளியேறி விடுங்கள். வீணாக திராவிடர்களை ஆரியர்களுக்குக் காட்டிக்கொடுத்து துரோகிப் பட்டம் கட்டிக்கொள்ளாதீர்கள். இந்த மந்திரி பதவி இன்று போனால், நாளை வரும். நீங்கள் உங்களுக்குத் தேடிக்கொள்ளும் பழியை என்றுமே துடைக்க முடியாது. எங்களைக் காட்டிக்கொடுக்காதீர்கள்! சாதித்தது போதும் வெளியேறுங்கள்! ஆரியரைப் பிரதமராகக் கொண்ட மந்திரி சபை அமைக்கட்டும். விடுதலைப்போர் தொடக்கிறோம். விரைவில் வெளியேறுங்கள்!

"புத்ததாசன்"

ஈரோட்டில் பொதுக் கூட்டங்கள்.

—()●()—

13—8—48-ம் தேதி சனிக்கிழமை மாலை 6-30-மணிக்குக் காரைவாய்க்கால் மைதானத்தில் தோழர் எம். கே. குகநாதன் தலைமையில் இந்தி எதிர்ப்புக் கமிட்டியின் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அதுபோது தோழர்கள் புலவர் ந. மு. மாணிக்கம், என். இ பாலகுரு, ஈரோடுவாசி ஆசிரியர் பி. சண்முக வேலாயுதம் ஆகியோர், ஆகஸ்டு 15-ம் தேதி இங்கு கல்வி மந்திரியார் வருவதை முன்னிட்டு இந்தியைத் தமிழ் நாட்டில் கட்டாயமாகப் புகுத்தியிருப்பதைக் கண்டிக்கும் முறையிலே கருப்புக்கொடி பிடிப்பது என்று எல்லா முடிவுகளையும் செய்து வைத்திருந்தோம், ஆனால் எங்கள் தலைவர் பெரியார் அவர்களின் அறிக்கைக் கிணங்கவும் இப்பொழுது பெரியாரவர்களிடமிருந்து, கல்விமந்தியார் ஆகஸ்டு 15-ம் தேதி சுதந்திர நாளன்று வருவதால் ஏதும் செய்யவேண்டாம் என்று தந்திவந்திருப்பதற் கிணங்கவும் எங்களுடைய ஏற்பாடுகளை யெல்லாம் நிறுத்திக்கொண்டோம் என்றும், 15-தேதிக்கப்புறம் எந்த மந்திரியார், எப்பொழுது வந்தாலும் கருப்புக்கொடி பிடிப்போம் என்றும் விளக்கிப்பேசினார்கள்.

கண்டனக் கூட்டம்.

23—8—48-ம் தேதி மாலை 6-30-மணிக்கு தோழர் சுப்பண்ணா தலைமையில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். இ. பாலகுரு, சுப்பையன், எஸ். அப்பாவு, பி. சண்முகவேலாயுதம் ஆகியோர் தலைவர் பெரியாரையும் தளபதி அண்ணாவையும் பிற 100-தோழர்களையும் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடந்துகொண்டு இருந்த சமயத்தில் பிடித்துக்கொண்டு போய்விட்ட அக்கிரமத்தைக் கண்டித்தும், இம்மாதிரியாகவே இந்த ஆட்சியாளர்கள் இனியும் நடப்பார்களானால் ஆட்சி முறை அழிவுகாலத்தின் கடைசிப் பாதைக்குச் செல்கிறது என்றுதான் அர்த்தம் என்றும், வடநாட்டு ஆதிக்கத்தையும், இந்தி எதிர்ப்பையும் வெற்றிகரமாகவே நடத்தி, வெற்றி பெறுவோம் என முழக்கமிட்டனர்.

கூட்டம் இரவு 9-மணிக்கு தலைவர் முடிவுரை கூறியபிறகு, தோழர் பெருமாள் நன்றிகூற இனிது முடிந்தது. ஏராளமான மக்கள் பெருந்திரளாக வந்துகொண்டே இருந்தனர்.

பள்ளிபாளையத்தில்.

24-8-48-ம் தேதி மாலை 7-மணிக்குப் பள்ளிபாளையம் இந்தி எதிர்ப்புச் செயல் கமிட்டியின் சார்பில் தோழர் சுப்பிரமண்யம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சுப்பையன், அப்பாவு, பாலகுரு, சண்முகவேலாயுதம் ஆகியோர் தலைவர்கள் கைது செய்ததையும், இந்தி எதிர்ப்புப்பற்றியும் பேசினார்கள். கூட்டம் இரவு 10-30-மணிக்கு முடிவுற்றது. ஊர் மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

புதிய வெளியீடுகள்.

★

1. தீண்டாமை ரூ. 1—8—0
2. இதோ! பெரியாரில் பெரியார் 0—6—0
3. திராவிடக் கழக லட்சியம் 0—4—0
4. மொழி—எழுத்து 0—4—0
5. வாழ்விலோர் திருநாள் 0—4—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

விற்பனை உரிமையாளர்

நாதன் கம்பெனி லிமிடெட்

கச்சேரி வீதி, ஈரோடு.

[2ம்பக்கத் தொடர்ச்சி]

பதவியில் அமர்ந்து விட்டாரென்றால் திராவிடர்கள் இந்த ஆட்சியில் தங்களுக்கு வேண்டிய உரிமைகளை எதிர்பார்க்கமுடியுமா? இதனையெல்லாம் கவனித்தால் ஆங்கில ஆட்சிக்கும் அடுத்த ஆட்சி ஆரியர்கள் ஆட்சிக்கு அஸ்திவாரம் கோலுவதாகத் தெரியவில்லையா? இதையெல்லாம் தெரிந்துதான், "திராவிடநாடு திராவிடருக்கே!" என்ற திட்டம் திறமையுடன் தீட்டப்பட்டது பல அறிஞர்களால். இன்று கேட்கப்படுகிறது திராவிடனுக்கு தனிநாடு தேவை என்று. நாம் கேட்கும் நாடு, இங்கிலாந்து, போலந்து, ஸ்விட்சர்லாந்து, ஹாலந்து, அயர்லாந்து, டென்மார்க், பெல்ஜியம், கிரீஸ், நேபாளம், பல்கேரியா, ஹங்கேரி, பாலஸ்தீன், யுகேஸ்லேவியா, துருக்கி, நார்வே, ஸ்வீடன், ஸ்பெயின், போர்ச்சுகல், அல்ஸ்டர், முதலிய நாடுகளைவிட பெரியநாடு, பெரியநாடு. மட்டுமல்ல, நீர்வளம், நிலவளம் நிறைந்த நாடு. இன்னும் கூறின் இந்த நாடு உலகத்துக்கே தலைமை வகிக்கக்கூடிய பெருமை இருக்கிறதென்றே சொல்லலாம். எனவே, இந்த நாடு அன்னியர் ஆதிக்கத்தினின்று விடுதலை அடைந்தால் தொழிற்சாலைகளும், விஞ்ஞானங்களும் நிறைந்த நாடாகத் திகழும்.

இதுமாத்திரமல்ல, அன்று இந்தியாவில் புகுந்து வியாபார வாயிலாகவும் இன்னும் பல வழிகளிலும் சுரண்டி வந்த ஆப்கான், அரபி, பார்சி, போர்ச்சுகல், டச்சு, பிரன்சுப்போன்ற எந்த நாட்டினரும் எந்த வகையிலேயும் சுரண்டப் புகமுடியாமல் செய்யலாம், தனித் திராவிடத்தில்.

இதையெல்லாம் உணர்ந்துதான் திராவிடத்தின் தலைவர் பெரியார் பிரசாரம் எனும் பீரங்கியைப் பிடிதளராமல் பிடித்து, பிரிவினை கூடாதெனப் பிதற்றித் திரியும் பித்தர்களை சுட்டு வீழ்த்தி விடுதலைக்கான வீரத்தோடு விரைந்து செல்கிறார்.

ஆகவே பல இயக்கங்களில் இருக்கும் திராவிடர்களும், பெரியார் நடத்தும் படையில் அணிவகுத்து பணிசெய்யத் துணிவுகொண்டு தனி நாடு காணுங்கள்! நாம் நம்முடைய நாட்டையும், உரிமையையும்பெற உணர்ச்சியுடன் உயிரையே தியாகம் செய்ய உறுதிகொள்ளவேண்டும். இதற்கு மக்களின் மடமையைப்போக்க மதி மிகுந்த மாணவமணிகள் தேவை! இனத்திற்கேற்பட்ட இழிவுகளையும், இன்னல்களையும் இல்லாமல் செய்ய இயக்கங்களைத் தோற்றுவிக்கும் இளைஞர்கள் தேவை! வஞ்சகத்தையும், வறுமையையும் ஒழித்து வருங்காலத்தில் வளமிக்க வாழ்வை வரவேற்கும் வாலிபர்கள் தேவை! இது நம்மால்தான் செய்யமுடியும். உலகின் பல புரட்சி சரித்திரங்களைப் படித்துப் பார்த்தால் நம்மைப்போன்றவர்களால்தான் நாடு விடுதலை அடைந்தது என்பது தெளிவாகும்.

எனவே, நாட்டின் விடுதலையிலே நாட்டங்கொள்ளுங்கள்; எத்தர்களின ஏசுதல்களையும் எதிர்ப்புகளையும் கண்டு ஏங்காமல் எண்ணிப்பாருங்கள்! ஏட்டிலே எழுதுங்கள்!! நாட்டிலே கூறுங்கள்!!!

திருவையாறு என்: சிங்கார வேலன்.

புதிய பதிப்பு

விற்பனைக்குத் தயார்!

★

1. பணம் பிடுங்கிப் பார்ப்பனர் ரூ. 0—14—0
2. பெண் ஏன் அடிமையானாள் 0—8—0
3. இயற்கை வழி ஆத்மீகவழி 0—4—0
4. அகத்தியர் ஆராய்ச்சி 0—3—0
5. திராவிடர்-ஆரியர் உண்மை 0—2—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்கும் இடம்
நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.

குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

தத்துவவிளக்கம்	0	12	0
புது ரஷ்யா	0	8	0
இந்தியாவின் குறை பாடுகள்	0	8	0
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்)	0	8	0
நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா?	0	6	0
கர்ப்ப ஆட்சி	0	6	0
பெரியார்பெருந்தொண்டு	0	6	0
வெளியேறு	0	6	0
பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம்	0	4	0
பொதுவுடைமைத் தத்துவங்கள்	0	4	0
புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை)	0	4	0
மதப்புரட்சி	0	4	0
வால்டையரின் வாழ்க்கைச் சரிதை	0	4	0
கார்ல் மார்க்ஸ்	0	4	0
சமதர்ம உபன்யாசம்	0	4	0
அப்பரும் திருஞான சம்பந்தரும்	0	3	0
சோஷியலிசம்	0	3	0
இலங்கை உபன்யாசம்	0	3	0
இராமாயணப் பாத்திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து!	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
ராமலிங்க சுவாமி பாடல்	0	2	0
தமிழ் இசை-நடிப்புக் கலைகள்	0	1	0

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE